415



# விமோசனம்

ஒரு மாதப் பத்திரிகை

| தொகுதி | ஆசிரியர்: | பகுதி |
|---|---|---|
| 1 | சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி | 3 |

சுக்ல-௵

## ஐப்பசி

புதுப்பாளையம்
காந்தி ஆசிரமம்,
திருச்செங்கோடு.

வருஷ சந்தா தபாற்கூலி உள்பட ரூபாய் ஒன்று.
தனிப்பிரதி அணா ஒன்று, தபாற்கூலி வேறு.

# பொருளடக்கம்.


| | | | |
|---|---|---|---|
| வேண்டாம் ! (படம்) | ... | ... | 81 |
| தாமதிப்பது கூடாது | ... | ... | 82 |
| இயந்திரங்களில் சிறந்தது (படங்களுடன்) | ... | ... | 83 |
| எல்லாம் ஒன்றே (படத்துடன்) | ... | ... | 85 |
| உழைப்பாளிகளுக்குத் தேவையா ? (படங்களுடன்) | | ... | 87 |
| மதுபான விளம்பரங்கள் | ... | ... | 89 |
| கடை ஏலம் | ... | ... | 91 |
| குடிப்பது கள்ளல்ல ! (படம்) | ... | ... | 92 |
| தெய்வயானை (படத்துடன்) | ... | ... | 93 |
| குடியும் குடியரசும் | ... | ... | 99 |
| பூமண்டலப் படம் | ... | ... | 102 |
| சத்துணவு நஷ்டம் | ... | ... | 103 |
| ரயில்வே சங்கங்களுக்கு | ... | ... | 105 |
| கிறிஸ்துவ வேதம் | ... | ... | 105 |
| உறுதிமொழி | ... | ... | 106 |
| ஊக்கங்கொண்டவர்களுக்கு | ... | ... | 107 |
| முன்னும் பின்னும் (படம்) | ... | ... | 108 |
| ஆட்சேபம் ஒன்றுதான் | ... | ... | 109 |
| மதுபானக் கும்மி | ... | ... | 111 |
| பத்து வருஷத்துக் கணக்கு (படம்) | ... | ... | 114 |
| திருவல்லிக்கேணி கள்ளுக்கடை | ... | ... | 115 |
| கடற்கரைக் கிளிஞ்சல் | ... | ... | 117 |
| சேரியும் சட்ட சபையும் (படம்) | ... | ... | 117 |
| கோயில் தென்னைமரம் | ... | ... | 118 |
| மகாத்மா என்ன சொல்லுகிறார் ? | ... | ... | |


இந்த மாதப்பத்திரிகை வேண்டுவோர் ரூ. 1—0—0 வருஷ சந்தா தொகையுடன் "வியோசனம்" காரியதரிசி, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கு எழுதிப் பதிவுசெய்து கொள்ளலாம். அயல் நாட்டுக்கு அதிக தபாற்கூலி 0—2—0 சேர்த்து அனுப்பவேண்டும். தனிப் பிரதி எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் மற்ற விடங்களிலும் பெறலாம். விலை அணா ஒன்று. தபாலில் எழுதிப்பெற்றால் தபாற்கூலி சேர்த்து 0—1—6.

# விமோசனம்

| தொகுதி 1 | சுக்லஹு ஐப்பசிமீ | பகுதி 3 |
|---|---|---|




நீ கள்ளுக்கடைக்குப் போகிறாயா? போகும்போது மனைவி மக்களை நினைத்துக்கொள். அவர்கள் உன்னை வேண்டாம்! வேண்டாம்! என்று பின்னுக்கு இழுக்கிறார்கள். கடையில் செலவு செய்யும் காசை அவர்களிடம் கொடுத்தால் எவ்வளவு சுகம் உண்டாகும், யோசித்துப் பார். அவர்களை ஏமாற்றாதே.

---

# தாமதிப்பது கூடாது

எழுபது வருஷத்திற்கு முன் இந்திய சர்க்காரின் மதுபான வருமானம் 1 கோடி ரூபாயாக விருந்தது. இது 1900-ம் வருஷத்தில் 6 கோடி ரூபாயாயிற்று. இந்த வருஷத்திலோ 24 கோடி ரூபாய்! மதுவிலக்குச் செய்யவேண்டுமென்றால், கட்குடி வருமானத்திற்குப் பதில் வேறு வருமானம் காட்டுங்கள் என்று கேட்கிறார்கள். வருமானம் வருஷா வருஷம் ஏறிக்கொண்டே போவதால், மதுவிலக்கு வரவரக் கடினமாகுமே யொழிய எளிதாகாது. சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும் அதை முழுதும் செலவழித்துவிடத் திட்டம் கூடவே தயாராகிறது. 1900-ம் வருஷத்திலும் அரசாங்கம் நடந்தது. அப்போது இந்தியா முழுதும் கள்ளு சாராய வருமானம் 6 கோடியே. இன்று 24 கோடியாயிற்று. ஆயினும் பணம் மிச்சம் கிடையாது. 24 கோடியும் செலவுதான் ஆகிறது. மதுபானம் இன்னும் அதிகரித்த பின், சர்க்கார் செலவும் இன்னும் அதிகரித்து, சிக்கனம் செய்வது இன்னும் கடினமாகும். ஆதலின் இதன் பொருட்டு மதுவிலக்கைத் தள்ளிப் போடுவதில் பயனில்லை. 70 வருஷத்திற்கு முன்பே செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். 30 வருஷத்திற்கு முன்பாவது செய்திருக்கவேண்டியது. இன்னும் தாமதித்தல் முற்றிலும் அறியாமையாகும். அரசாங்கச் செலவு இனியும் விஷம் போல் ஏறிக்கொண்டுதான் போகும். ஏறினதை இறக்க முடியாதபடி எல்லாவித ஏற்பாடும் செய்து வருவார்கள். சம்பளங்கள் குறைக்கவேண்டுமென்றால் நம்முடைய ஆட்களே ஆக்ஷேபிப்பார்கள். மதுவிலக்கைப் பின்னால் செய்து கொள்ளலாம் என்று இருப்பது, கடனைப் பின்னால் தீர்த்துக்கொள்ளலாமென்று வட்டியையும் பெருக விடுவது போலவே முடியும்.

---

தஞ்சாவூர் தேவஸ்தானக் கமிட்டியார் கோயில் தென்னமரங்களைக் கள்ளுக்கு விடுவதில்லை என்று தீர்மானித்ததாகப் பத்திரிகையில் படித்து மிகுந்த மகிழ்ச்சி யடைந்தோம். சுவாமிக்கு இதுவே ஒரு நல்ல அபிஷேகமாகும்.

# இயந்திரங்களில் சிறந்தது

இது ஒரு அழகான கடிகாரம். இதன்விலை ஆறு ரூபாய். சரியாய்ப்



பார்த்துக்கொண்டால் ஐந்து வருஷம் ஓடும். நேரத்தைத் தவறில்லாமல் காட்டும். திறந்து பார்த்தால் உள்ளே அநேக சக்கரங்களிருப்பது தெரியும்.



இது ஒரு புகைவண்டி என்ஜின். இது எத்தகைய பாரத்தையும் இழுக்கும். மணிக்கு 40மைல் வேகமாய் ஓடும். இதையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஓடாது.





இது ஒரு மோட்டார் வண்டி. எந்தப் பாதையிலும் மிக வேகமாய் ஓடும். வெகு நல்ல இயந்திரம். இதன் விலை ரூ. 4000.

இது ஒரு கப்பல். இது கடலில் ஓடுவதற்குக் காற்று வேண்டியதில்லை. இயந்திரத்தினாலேயே ஓடும். பதினாயிரம் மைல் தூரம் கடல்மேல் செல்லும். வியாபாரத்திற்கு அநேக கோடிக்கணக்கான மூட்டைகள் சுமந்து செல்லும்.





இவையெல்லாம் மின்சார இயந்திரங்கள். இங்கே தந்தியில் பேசினால் ஒரு விநாடியில் ஆயிரம் மைலுக்கு அப்பால் தெரிந்துகொள்வார்கள். இவைகளையும் வெகு ஜாக்கிரதையாகக் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொண்



# தாமதிப்பது கூடாது

எழுபது வருஷத்திற்கு முன் இந்திய சர்க்காரின் மதுபான வருமானம் 1 கோடி ரூபாயாக விருந்தது. இது 1900-ம் வருஷத்தில் 6 கோடி ரூபாயாயிற்று. இந்த வருஷத்திலோ 24 கோடி ரூபாய்! மதுவிலக்குச் செய்யவேண்டுமென்றால், கட்குடி வருமானத்திற்குப் பதில் வேறு வருமானம் காட்டுங்கள் என்று கேட்கிறார்கள். வருமானம் வருஷா வருஷம் ஏறிக்கொண்டே போவதால், மதுவிலக்கு வரவரக் கடினமாகுமே யொழிய எளிதாகாது. சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும் அதை முழுதும் செலவழித்துவிடத் திட்டம் கூடவே தயாராகிறது. 1900-ம் வருஷத்திலும் அரசாங்கம் நடந்தது. அப்போது இந்தியா முழுதும் கள்ளு சாராய வருமானம் 6 கோடியே. இன்று 24 கோடியாயிற்று. ஆயினும் பணம் மிச்சம் கிடையாது. 24 கோடியும் செலவுதான் ஆகிறது. மதுபானம் இன்னும் அதிகரித்த பின், சர்க்கார் செலவும் இன்னும் அதிகரித்து, சிக்கனம் செய்வது இன்னும் கடினமாகும். ஆதலின் இதன் பொருட்டு மதுவிலக்கைத் தள்ளிப் போடுவதில் பயனில்லை. 70 வருஷத்திற்கு முன்பே செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். 30 வருஷத்திற்கு முன்பாவது செய்திருக்கவேண்டியது. இன்னும் தாமதித்தல் முற்றிலும் அறியாமையாகும். அரசாங்கச் செலவு இனியும் விஷம் போல் ஏறிக்கொண்டுதான் போகும். ஏறினதை இறக்க முடியாதபடி எல்லாவித ஏற்பாடும் செய்து வருவார்கள். சம்பளங்கள் குறைக்கவேண்டுமென்றால் நம்முடைய ஆட்களே ஆக்ஷேபிப்பார்கள். மதுவிலக்கைப் பின்னால் செய்து கொள்ளலாம் என்று இருப்பது, கடனைப் பின்னால் தீர்த்துக்கொள்ளலாமென்று வட்டியையும் பெருக விடுவது போலவே முடியும்.

---

தஞ்சாவூர் தேவஸ்தானக் கமிட்டியார் கோயில் தென்னை மரங்களைக் கள்ளுக்கு விடுவதில்லை என்று தீர்மானித்ததாகப் பத்திரிகையில் படித்து மிகுந்த மகிழ்ச்சி யடைந்தோம். சுவாமிக்கு இதுவே ஒரு நல்ல அபிஷேகமாகும்.

# இயந்திரங்களில் சிறந்தது

இது ஒரு அழகான கடிகாரம். இதன்விலை ஆறு ரூபாய். சரியாய்ப் பார்த்துக்கொண்டால் ஐந்து வருஷம் ஓடும். நேரத்தைத் தவறில்லாமல் காட்டும். திறந்து பார்த்தால் உள்ளே அநேக சக்கரங்களிருப்பது தெரியும்.





இது ஒரு புகைவண்டி என்ஜின். இது எத்தகைய பாரத்தையும் இழுக்கும். மணிக்கு 40மைல் வேகமாய் ஓடும். இதையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஓடாது.





இது ஒரு மோட்டார் வண்டி. எந்தப் பாதையிலும் மிக வேகமாய் ஓடும். வெகு நல்ல இயந்திரம். இதன் விலை ரூ. 4000.

இது ஒரு கப்பல். இது கடலில் ஓடுவதற்குக் காற்று வேண்டியதில்லை. இயந்திரத்தினாலேயே ஓடும். பதினாயிரம் மைல் தூரம் கடல்மேல் செல்லும். வியாபாரத்திற்கு அநேக கோடிக்கணக்கான மூட்டைகள் சுமந்து செல்லும்.







இவையெல்லாம் மின்சார இயந்திரங்கள். இங்கே தந்தியில் பேசினால் ஒரு வினாடியில் ஆயிரம் மைலுக்கு அப்பால் தெரிந்துகொள்வார்கள். இவைகளையும் வெகு ஜாக்கிரதையாகக் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொண்



டால்தான் வேலை செய்யும். இயந்திரத்தில் ஏதாவது பிசகு நேர்ந்தால் வேலை செய்யாது.

இந்த ஆச்சரியமான இயந்திரங்கள் எல்லாவற்றிலும் மிகவும் ஆச்சரியமான இயந்திரம் மனிதனுடைய தேகமும் மூளையும் ஆகும். எத்தகைய கடிகாரமும் இதற்கு சமானமாகாது. எத்தகைய புகைவண்டி அல்லது மோட்டார் அல்லது தந்தியும் இதைப்போன்ற திறமையான இயந்திரமாகாது.



இந்த தேகத்திற்கு என்ன விலை மதிப்பிடலாம்? கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்த இயந்திரத்தை நம்மால் செய்யமுடியாது. கடிகாரத்திலும் மோட்டாரிலும் சக்கரங்களே தவிர, சுயமான புத்தி கிடையாது. கெட்டுப்போனால் சீர்ப்படுத்த மனிதன் வேண்டும். எத்தனை யுக்திகள் அடங்கிய இயந்திரமானாலும் அதை நடத்த ஒரு மனிதன் வேண்டும். தடை ஏற்பட்டால் தவிர்த்துக்கொள்ள அதற்கு சுயமான சக்தியில்லை. மனிதனுடைய தேகமோ அப்படியல்ல. தன்னைத்தானே அது நடத்திக் கொள்ளும். தன்னைத் தானே பழுது பார்த்துக்கொள்ளும் விசித்திர சக்தியும் அதற்குண்டு. பகுத்தறிவு என்னும் அதிநுட்பமான சக்தி அந்த இயந்திரத்தின் ஒரு சிறப்பான அமைப்பு. ஐந்து ரூபாய் விலையுள்ள ஒரு கடிகாரத்தைக் குழந்தையிடம் கொடுக்கமாட்டோம்; கெடுத்துவிடும் என்று பயம். எந்த இயந்திரத்தையும் சரியாய்ப் பாதுகாப்பவனிடம் தான் கொடுப்போம். ஆனால் மனிதனுடைய புத்தியும் பகுத்தறிவும் தேக அமைப்புகளும் கெட்டுப் போகும்படி கள்ளையும் சாராயத்தையும் உள்ளே கவலையின்றிச் செலுத்துகிறோம். கொஞ்ச நேரம்தான் கெட்டிருக்கும், பிறகு சரியாய்ப் போகும் என்று எண்ணி அம்மாதிரி மூர்க்கத்தனமான காரியம் செய்கிறோம். பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் மூளையின் நுட்பமான அமைப்புகளை அறிவது கஷ்டம். இத்தகைய நல்ல இயந்திரத்தை முரட்டுத்தனமாய்க் கெடுக்கிறோம். கடிகாரம் அல்லது மோட்டார் இயந்திரத்தில் மண்ணைப்போட்டு அது தட்டுத் தடுமாறிப் போவதைப் பார்த்து வேடிக்கையென்று நினைப்போமா? ஆனால் நம்முடைய மூளையை மதுபானத்தால் அவ்விதம் செய்து அதுவே ஒரு சுகமென்று நினைக்கிறோம். இது எவ்வளவு அறியாமை! தினம் ஒரு தடவை கெட்டுப்போய், தட்டுத்தடுமாறி, தலைகீழாக நடத்தப்பட்டுவந்தால் எந்த இயந்திரம்தான் தாங்கும்? விலை மதிப்பற்ற மிகச் சிறந்த ஒரு இயந்திரத்தை மூடத்தனமாய்ப் பாழ்படுத்துகிறோம்.

# எல்லாம் ஒன்றே

"சாராயம் தான் கெட்டது; அது அதிக போதை யுண்டாக்கும்; அதைக் குடித்தவன் பிறகு தப்பமாட்டான்; அதற்கு அடிமையாய் விடுகிறான்! கள்ளு அப்படியல்ல. விலையும் அதிகமில்லை. தேகத்திற்கு சாராயத்தைப்போல அவ்வளவு கேடு விளைப்பதில்லை. ஏழைகளுக்கு அது தான் ஆறுதல்" என்று ஒரு பொய் வாதம் சில அதிகாரிகள் செய்வதுண்டு. முற்றிலும் மதுபானத்தை ஒழிக்க முடியாது, கள்ளு மட்டிலாவது இருந்து தான் தீரவேண்டு மென்று அவர்களுடைய கட்சி. இப்படியே மேல் நாட்டிலும் ஒரு கட்சி யுண்டு. அவர்கள் பீர், ஒயின் இருக்கவேண்டும்; வுஸ்கி, பிராந்தி, ஜின் இவைகளைத் தான் ஒழிக்க வேண்டும் என்பார்கள். இந்த வாதத்தை அமெரிக்கா ஒப்புக்கொள்ளவில்லை. அந்த நாட்டில் அரசாங்கத்தார் எல்லாவித மதுபானத்தையும் ஒழித்து விட்டார்கள்.




எந்த மதுபானத்திலும் போதை உண்டாக்கும் சத்து அதிலுள்ள மதுஸாரம் தான். இது கள்ளிலும் சாராயத்திலும் பீரிலும் வுஸ்கி, பிராந்தி எல்லாவற்றிலும் இருக்கிறது. ஆனால் அளவு மாத்திரம் வெவ்வேறு. கள்ளில் 100 க்கு 8 பங்கும், பீரில் 100 க்கு 4 பங்கும், சாராயத்தில் 100 க்கு 50 பங்கும் மதுஸாரம் இருக்கும்.

எந்த வித மதுபானம் செய்தாலும் இந்த வீதாசாரப்படி குடிக்கும் அளவுக்கேற்ப மதுஸாரம் தேகத்திற்குள் போய்ச் சேரும். சாராயத்தைவிடக் கள்ளில் மதுஸாரம் குறைவாயிருந்தாலும் குடிக்கும் அளவு அதிகம். ஆகையால் உடம்பில் சேரும் விஷம் இரண்டிலும் ஒன்றே. இந்த விதமே எந்த வகை மதுபானமும் உடம்பில் விஷத்தை ஏற்றும். மிதமாகக் குடித்து நிறுத்திக் கொள்ளலாமே என்று சொல்லலாம். எந்த வித மதுபானமானாலும் சரி, ஒரு தடவை குடித்தால் மறுமுறை குடிக்கலாம் என்கிற மனோபாவம் உண்டாகும். மனதைக் கட்டுப்படுத்தி அந்த ஆவலைத் தடுத்துக்கொள்ளும் சக்தி குறைந்து போகும். இரண்டு மூன்று

பேர் சேர்ந்துவிட்டால் சொல்ல வேண்டியதில்லை. ஒருவரை யொருவர் தூண்டிக் கொண்டும், பின் வாங்குவது பயங்காளித்தனமென்றெண்ணி யும், மிதமிஞ்சிக் குடித்து விடுகிருர்கள்.

குடித்தே அறியாதவன் இத்தகைய தூண்டுதல் பேச்சுகளைக் கொஞ் சமும் பொருள் படுத்தமாட்டான். கொஞ்சம் குடித்தவன் அவைகளைக் கேட்டபின் தடுத்துக்கொள்ள மன உறுதியற்றவனுகிருன். இதுதான் கொஞ்சமாகக் குடிப்பதின் பெரிய ஆபத்து. மதுஸார வீதாசாரம் கொஞ்சமாக உள்ள குடிவகையாயினும் அதையே அதிகமாகக் குடித்தால் தீவிர மதுஸார பானத்திற்குச் சமானமான கேடு விளையும்.

வர வர மதுஸார விஷத்திற்கு தேகம் ஒத்துக்கொண்டு தினே தினே அதிகம் குடிக்கச் செய்கிறது. முதல் நாள் உண்டான சந்தோஷம் அல்லது மயக்கம் மறுபடி உண்டாக்கிக் கொள்ள முன்னைவிட அதிகம் குடிக்க வேண்டுமாகிறது. எத்தனை குடித்தாலும் தங்களுக்கு போதை உண்டாகிறதில்லை யென்று சிலர் சொல்லிக்கொள்ளுவார்கள். அதன் உண் மைப் பொருள் என்னவென்ருல் அத்தகையோனுடைய தேகத்திலுள்ள நரம்புகள் மதுஸார விஷத்தால் கொல்லப்பட்டு மாருத தீங்கு உண்டாகி விட்டது என்பதே.

வழக்கமாக ஆக, அதிகம் குடித்தாலும் போதை எறுகிறதில்லை. குடிப்பவன் தனக்கு போதை உண்டாகவில்லை யென்று வர வர அதிகம் குடித்து தேகத்திலுள்ள எல்லா அங்கங்களையும் கெடுத்துக் கொள்ளுவான். புத்தி சுவாதீனத்தில்தான் இருக்கிறதென்று தைரிய மாகக் குடிப்பான். பிறகு உடல் முழுதும் கெட்ட பின் வழியின்றித் திகைக்க வேண்டி நேரிடும்.

---

இங்கிலாந்தில் தபாலாபீஸ் கட்டிடங்களிலும் தபாலாபீஸ் பிரசுரங் களிலும் மதுபான விளம்பரங்கள் போடுவதில்லை யென்று பிரிட்டிஷ் அர சாங்கத்தார் சமீபத்தில் தீர்மானித்திருக்கிருர்கள். மேற்படி விளம்பரங் களில் வருஷம் 4000 பவுன் வருமானம் கிடைத்து வந்ததாம்.

# உழைப்பாளிகளுக்குக் கள்ளு தேவையா ?

பாடுபட்டு வயிறு வளர்ப்பவர்களுக்குக் கள்ளு பலம் கொடுக்கும் என்று சிலர் எண்ணுவது சுத்த தவறு. குடிப்பதினால் தேகத்திற்கு பலம் உண்டாவதே கிடையாது. பாடுபட்டுப் பிழைப்பு நடத்தி வரும் ஏழைகளுக்குக் கள்ளு வேண்டியதா என்று பெரிய வைத்தியர்கள் நல்ல ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். கள்ளு, பிராந்தி முதலிய எந்த மதுபானமும் உடம்புக்கு பலம் கொடுக்காது என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். மலைமேல் ஏறுகிறவர்கள் சிலரைக் கொண்டு பரீக்ஷை செய்து பார்த்தார்கள். குடிப்பவர்கள் செய்த வேலைதான் வரவரக்குறைந்து கொண்டுவந்தது. கள்ளு பெரிய ஏமாற்றம். அதில் நன்மை யென்பது கொஞ்சமேனுமில்லை.



தேகத்தை உழைத்து வேலைசெய்கிறவர்களின் கஷ்டம் கள்ளினால் குறைவதில்லை. குடிப்பதால் நரம்புகள் தளர்ந்து போகும். சிரமம் அதிகமாகும். செய்யும் வேலை வரவரக் குறையும்.

கள்ளினால் சுகமில்லை. மனைவி மக்களுடன் நல்லுணவு உண்டு தண்ணீர் குடித்து விளையாடித் தூங்கினால் தேகசிரமம் ஆறும். போதை கொள்வதினால் ஒரு பயனுமில்லை. கள்ளுக் கடையிலும் வழியிலும் போதைகொண்டு போக்கும் நேரத்தில் வீட்டுக்குச்சென்று நல்ல காற்றில் படுத்துத் தூங்கினால் தேகத்தின் வலியெல்லாம் எளிதில் போகும். சாராயம் குடித்துவிட்டால் தேகத்தில் உஷ்ணமுண்டாகும் என்றும், குளிரைத் தடுக்கும் என்றும் சிலர் எண்ணுவது சுத்தப் பிசகு. இரத்த ஓட்டத்தைக் காத்தும் வரம்புக்குள்ளிருக்குமாறு தடுத்தும் வருகின்ற நரம்புகளை மதுஸாரம் கொல்லும். அதனால் அளவுக்கு மிஞ்சி இரத்தம் ஓடும். உடலின் மேல் தோலுக்கு இரத்தம் அதிகம் வருவதால் தேகத்தில் உஷ்ணம் உண்டான மாதிரி தோன்றும். உண்மையில் தோலுக்கு இரத்தம் அதிகம்



வருவதால் காற்றும் குளிரும் தேகத்திலுள்ள இரத்த வெப்பத்தைச் சீக்கிரத்தில் தணித்து பலவீனத்தையே உண்டாக்கும்.

ஒரு ஆங்கில இராணுவ வீரர் செய்த பரீக்ஷையைக் கேளுங்கள். ஒரு சமயம் அவர் தன் சேனையிலுள்ள சிப்பாய்களை மூன்று விதமாகப் பிரித்தார். ஒரு தொகையினருக்கு தினமும் சாப்பாட்டுடன் கொஞ்சம் ஆங்கில வழக்கப்படி சாராயம் கொடுத்து வந்தார். இரண்டாவது தொகுதிக்கு தினமும் கொஞ்சம் பீர் வார்த்து வந்தார். மூன்றாவது தொகுதியை மதுபான மெதுவுமின்றி நடத்திவந்தார். அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நடந்துசெல்ல வேண்டியிருந்தது. சாராயம் குடித்தவர்கள் முதலில் வெகு உற்சாகத்துடன் வேகமாய்ச் சென்றார்கள். நாளாக ஆக சாராயம் குடித்தவர்கள் பின்னடைந்துவிட, பீர் குடித்த தொகுதி முன்னால் சென்றுவிட்டது. அதன் பிறகு கள்ளு சாராயம் எதுவும் தொடாத தொகுதியே எல்லாருக்கும் முன் சென்று சேரவேண்டிய இடம் போய்ச்சேர்ந்தது. மதுஸாரத்தால் முதலில் உற்சாகம் உண்டாவது போல் தோன்றினாலும், அவ்வளவுக்குப் பின்னால் பலவீனம் உண்டாவது நிச்சயம்.

உடம்பிலுள்ள தசையின் பலம் ஒரு புட்டி கள்ளு, அல்லது இரண்டு புட்டி பீர் குடிப்பதினால் 100க்கு 46 பங்கு குறைவாகிறது.

புத்தி உபயோகிக்கவேண்டிய தொழில்களில், அதாவது, கண், கை, கால், மூளை எல்லாம் சேர்ந்தாற்போல் வேலைசெய்யவேண்டிய காரியங்களில் மதுபானம் மனிதனுடைய திறமையைக் கெடுத்துவிடுகிறது.

---

ஹென்ரி போர்டு என்பவர் உலகப் பிரசித்திபெற்ற மோட்டார் வியாபாரி. அமெரிக்காவின் பெரும் பணக்காரர்களில் ஒருவர். அமெரிக்காவிலுள்ள மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை முன்னமே பிரசுரித்திருக்கிறோம். அவர் மற்றோரிடத்தில் சொல்லி யிருப்பதாவது :—“அமெரிக்காவின் செல்வப் பெருக்கையும் மதுவிலக்கையும் தனியாகப் பிரிக்கமுடியாது. மதுவிலக்கு இல்லாவிட்டால் செல்வப் பெருக்கும் இல்லை. உலகிலேயே தற்போது தொழிலாளிகளுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கும் தேசம் அமெரிக்காதான். இது எப்படி சாத்தியமாகிறது? தொழிலாளிகள் தங்கள் உழைப்பினால் அதிக செல்வம் உற்பத்தி செய்வதினாலேயே தாங்களும் அதிக சம்பளம் பெறுகிறார்கள். அவர்கள் குடித்துத் தங்கள் மூளையை மழுங்கச் செய்து கொண்டால் அவ்வாறு நல்ல வேலை செய்யமுடியாது. ஆகவே நல்ல சம்பளமும் பெறமாட்டார்கள்.”

# மதுபான விளம்பரங்கள்

கள்ளுக் கடையை மூடுங்கள் என்றால், ஜனங்கள் எப்படியும் குடித்துத்தான் தீருவார்கள், லைசென்ஸ் கடை இல்லாமல் போனால் திருட்டுச் சாராயம் காய்ச்சிக் குடிப்பார்கள் என்று சர்க்கார் சமாதானம் சொல்லுகிறார்கள். இது உண்மையான சமாதானமென்றால், மதுபான விளம்பரங்களையாவது சர்க்கார் என் நிறுத்தக்கூடாது? குடிக்க முன் வராதவர்களையுங் கூட வலுவில் அழைக்கும் விளம்பரங்கள் என்? பத்திரிகைகளிலும் சுவர்களிலும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் எங்கே பார்த்தாலும் மனதைக் கவரும்படியான படங்களும் ஆபாசப் பொய்களும் ஏமாற்றமும் கலந்த வுஸ்கி, பிராந்தி, பீர் விளம்பரங்களை என் ஒழிக்கச் சட்டம் செய்யக்கூடாது? வேசித்தனமும் சூதாட்டமும் நாட்டில் நடந்து வருவதை அடியோடு நிறுத்த முடியவில்லையாயினும் வேசிகளுடைய படமும் விலாசமும் கண்ட விளம்பரங்களையாவது, சூதாட்டக்காரர்களுடைய அழைப்புகளையாவது பத்திரிகைகளிலும், புஸ்தகங்களிலும், தெருவிலும், சுவரிலும் போடவிடுகிறோமா? அதே மாதிரி இந்த வுஸ்கி தினுசு பலத்தைக் கொடுக்கும், அந்த பிராந்தி தினுசு வியாதியைத் தடுக்கும், இந்த பீரைக் குடியுங்கள், இந்த ஒயினில் திராக்ஷையைத் தவிர வேறில்லை, ஆயாசத்தைத் தீர்க்கும், சூட்டைத் தணிக்கும் என்று இவ்வாறெல்லாம் மோச விளம்பரங்களும் படங்களும் போடுவதை ஒழித்து விடலாமே? தாங்களாகவே குடிப்பவர்கள் குடித்துக் கெடட்டும் என்றாலும், சும்மா இருப்பவர்களையுங் கூட இழுக்கும்படியான பொய் விளம்பரங்களை முற்றிலும் தடுத்து விடுவதே நியாயமாகும். இதற்காகவாவது தகுந்த சட்டம் உடனே செய்வது அரசாங்கத்தின் கடமை. சீமையிலிருந்து கப்பல் கப்பலாக வுஸ்கி, பிராந்தி, பீர் இந்தியாவுக்கு அனுப்பி நாட்டைப் பாழாக்கிவரும் பெரிய வியாபாரிகளைக்கண்டு பயந்து அரசாங்கத்தார் இத்தகைய சட்டம் கொண்டுவராமலிருக்கிறார்கள். நம்முடைய பிரதிநிதிகளோ அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ள மாட்டார்களே என்று கை கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். அந்நிய நாட்டு மதுபான வியாபாரிகளுடைய விளம்பரங்கள் வரவர வலுத்து வருகின்றன. அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்டுக் கண்டிப்பான முறையில் நடைபெற்று வருகிறபடியால் ஐரோப்பிய மதுவியாபாரிகள் இந்திய வியாபாரத்தை எதிர்பார்க்கிறார்கள். முன்னைவிட அதிக மும்முரமாக வேலைசெய்து இந்தியாவைக் கொள்ளையிடப் பார்க்கிறார்கள். "இந்தியாவில் 30 கோடி

மூடர்கள் இருக்கிறார்கள், அவர்கள் குடித்தால் ஏராளமான பீரும் பிராந்தியும் செலவாகும்" என்று எதிர்பார்க்கிறார்கள். நம்முடைய புண்ணிய பூமியில் சீமைச்சரக்கு இறக்குமதிக் கணக்கைப் பார்த்தால்:—

1904-ம் வருஷத்தில் 13 லக்ஷம் காலன் சாராய வகைகள் இறக்குமதியாயின.

1927-ம் வருஷத்தில் 62 லக்ஷம் காலன் சாராய வகைகள் இறக்குமதியாயின.

13 லிருந்து 62 என்றால் ஒரு மேசைக் குடியனுக்கு ஐந்து மேசைக் குடியன் என்றாயிற்று.

சீமைச்சாராய வியாபாரிகள் இந்திய அரசாங்கத்திலும் மிகுந்த செல்வாக்குள்ளவர்களா யிருக்கிறார்கள். நாமனைவரும் ஒன்றுகூடிப் பெரும் போர் புரிந்தாலொழிய அவர்களை வெல்லமுடியாது. நம்முடைய மந்திரிகளை அவர்கள் திருணமாக எண்ணுகிறார்கள்; ஏமாற்றுகிறார்கள். உள்ளூர் கள்ளு சாராயக் கடைகளை மூட இடங்கொடுத்தால் தங்களுடைய வியாபாரமும் கூடவே எடுபட்டுப்போகும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகையால் கள்ளுக்கடை இருந்துதான் தீரவேண்டும் என்றும், மதுவிலக்குப் பேச்சே வெறும்பேச்சு என்றும் அவர்கள் மூட்டுக் கட்டை போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

ஒரு தாலூகாவில் கடைகளை மூடினால் எல்லாத் தாலூகாவிலும்தான் மூட வேண்டி நேரிடும் என்று அவர்கள் அறிந்து அதற்கும் தடை செய்கிறார்கள். 10 கடை இருக்குமிடத்தில் 8 கடை செய்து நிதானமாய் மதுவிலக்கு நடத்தலாம் என்று சொல்லுவது அவர்களுடைய வழக்கம். ஏனென்றால் கடை குறைப்பதால் வியாபாரம் குறையாது என்று அவர்களுக்குத் தெரியும். இன்னும் பீர் வுஸ்கி அதிகமாகவே செலவாகும். புட்டி வகைகள் வீட்டில் வைத்துக்கொள்ள சவுகரியம்.

இவர்களுடைய ஏமாற்றங்களுக்கு நாம் ஆளாகாமல் மதுபான வியாபாரத்தினின்று பூரண விமோசனம் பெற விடா முயற்சியுடன் கிளர்ச்சி செய்யவேண்டும். நம்முடைய சட்டசபைப் பிரதிநிதிகளைத் தூங்க விடக்கூடாது.

வெளிநாட்டு மதுவர்க்கங்களின் வியாபாரத்துக்கு விளம்பரங்கள் மிக்க அவசியம். மதுபான விளம்பரங்களை முற்றிலும் ஒழித்தால் முதல் கோட்டை நமக்கு வசப்பட்டதாகக் கருதலாம்.

சில பத்திரிகைகள் தாங்களாகவே மதுபான விளம்பரங்கள் வேண்டாம் என்று ஒழித்திருக்கின்றன. ஏராளமான பணம் வாரிக்கொடுத்து ஆசைகாட்டினபோதிலும் அந்த லாபத்தை மறுத்து வரும் பத்திரிகைகளை மெச்சவேண்டியது நமது கடமை.

# கடை ஏலம்

கள்ளுக்கடை சாராயக்கடை "ஏலம்" என்ருல் எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஏலத்தில் விடுவது கள்ளுக்கடை வைத்திருக்கும் வீடு அல்லது பானைகளையல்ல. ஒரு ஊரிலும் அதைச் சுற்றிலும் உள்ள குடியர்களுக்குக் கள்ளு சாராயம் விற்று லாபம் சம்பாதிக்கும் பாத்தியதையைத்தான் ஏலத்தில் விடுவது. சர்க்காருக்கு எவன் அதிக தொகை கட்ட ஒப்புக்கொள்ளுகிருனே அவனுக்குச் சர்க்கார் கள்ளு விற்க அநுமதி தருகிருர்கள். இப்படியாக ஏலம் எடுப்பவன் தன் வியாபாரத்திற்கு வேண்டியது தென்னைமரம், பனைமரம் தேடி அதற்காகும் எல்லாச் செலவும் போட்டுக்கொள்ளவேண்டும். தோட்டம் வைத்திருப்பவர்களுக்கும் கூலிக்காரர்களுக்கும் வண்டிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கவேண்டியதெல்லாம் அவன் கொடுக்கவேண்டும். இதையும், தான் சர்க்காருக்குக் கட்டும் தொகையையும், அதற்குமேல் கடைச்செலவு, தனக்கு வேண்டிய லாபம் எல்லாம் கணக்கிட்டு, ஒரு சீசா கள்ளு இந்த விலையென்று அவன் விற்கவேண்டியது. ஏழைகள் பணத்தைக் கொடுத்து போதை கொள்ள வேண்டியது. அந்தப் பணத்திலிருந்து அவன் சர்க்காருக்குக் கட்டவேண்யதைக் கட்டிவிட்டுக் கடையில் வேலைசெய்யும் வேலைக்காரர்கள், கள்ளுக்கு மரம் விட்டவர்கள், கள் இறக்குகிறவர்கள், வண்டிக்காரர்கள் முதலிய எல்லாருக்கும் கூலி முதலியவை கொடுத்து மிகுதியைத் தன்னுடைய லாபமாக வைத்துக்கொள்ளுவான். இதே மாதிரிதான் சாராயக்கடைகளும். ஆகையால் எவ்வளவுக் கெவ்வளவு ஜனங்கள் ஏமாந்து கள்ளுக்கும் சாராயத்திற்கும் பணம் போட்டுக் கெட்டுப் போகிருர்களோ அவ்வளவுக் கவ்வளவு ஏலத்தில் எடுத்தவனுக்கு லாபம்.

இவ்வருஷத்தில் ஒரு ஊரில் கள்ளு விற்கும் பாத்தியதையை மாதம் ரூ. 100 சர்க்காருக்குக் கட்டுவதாய் ஒப்புக்கொண்டு ஒருவன் ஏலத்தில் எடுக்கிருன். நல்ல லாபம் கிடைக்கிறது. மற்ருெருவன் அடுத்த வருஷத்தில் போட்டி போட்டு சர்க்காருக்கு மாதம் 1-க்கு ரூ. 150 கட்டுவதாய் ஏலத்தில் எடுக்கிருன். அதிக ஜனங்கள் குடித்தால்தான் அவனுக்கு சரியான லாபம் கிடைக்கும். அதற்கு வேண்டிய முயற்சியும் அவன் எடுப்பான். இங்ஙனமிருக்க, மதுபானத்தைக் குறைக்கத்தான் கலால் இலாகாவை வைத்திருப்பதாக சர்க்கார் சொல்லுகிருர்களே, இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது பாருங்கள்? எவன் அதிக பணம் கட்டுவதாய் ஒப்புக் கொள்ளுகிருனே அவனுக்கு விற்கும் அனுமதிச் சீட்டு கொடுக்கிருர்

கள். அதன்மேல் அவன் எண்ணம், முயற்சி, எல்லாம் மதுபானம் அதி கரிக்கச் செய்யவேண்டுமென்று தானே யிருக்கும்? மதுபானம் கூடாது என்றும், அது உடலுக்கும் உயிருக்கும் பகையாகும் என்றும், மக்கள் மனைவிகளை நினைத்துக் கள்ளுக்கடையை விலக்குங்கள் என்றும் யாராவது பிரசாரம் செய்தால் அவர்களைத் தங்கள் விரோதிகளாகத் தானே ஏலத்தில் எடுத்தவர்கள் பாவிக்கவேண்டும்? தாங்கள் சர்க்காருக்குப் பணம் கட்ட ஒருவர்மேல் ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டு ஒப்பியிருப்பதால் எப்படியாவது தங்களுடைய வியாபாரம் விருத்தியடைவதே அவர்களு டைய கருத்தாயிருக்கும். "எப்படியும் குடிக்கத்தான் போகிறார்கள், ஆகையால் வரம்புக்குள் கட்டுப்படுத்திக் கள்ளும் சாராயமும் விற்றுத்தான் தீரவேண்டும்" என்று சர்க்கார் நினைத்தால் அவர்கள் செய்யவேண்டிய முறை வேறு. விற்பவன் பொறுப்புவாய்ந்த உத்தியோகஸ்தனு யிருக்க வேண்டும். சொந்த லாபம் சம்பாதிக்க இடமின்றிச் செய்யவேண்டும். அப்படி யிருந்தாலல்லவோ விற்பனை குறையும்? ஏலதாரன் எவ்வளவு அதிகம் விற்கிறானோ அவ்வளவு அவனுக்கு லாபம் என்கிற முறையின்கீழ், நாட்டில் கட்குடியை அதிகரிப்பதுதான் அவனுடைய நோக்கமாயிருக் கும். இந்த முறைதான் நம்முடைய அரசாங்கம் இப்போது பின்பற்றி வருவது.

---

குடிப்பது கள்ளல்ல! மனைவி மக்களுடைய உயிரைக் குடித்து வருகிறாய்.



# தெய்வயானை

[ரா. கி.]

என்னுடைய நண்பர் வெற்றிலைப்பாக்குக்கடை ஓமக்குட்டி முதலியாரும் நானும் ஒருநாள் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். மதுவிலக்கு இயக்கத்தைப்பற்றிப் பேச்சு வந்தது. "இருக்கட்டும். நீங்கள் சாராயக்கடைக் குத்தகை ஒரு காலத்தில் எடுத்திருந்தீர்களாமே. அதை எப்படி விட்டீர்கள்? உத்தரமேரூர் விட்டு சென்னைப்பட்டணத்துக்கு ஏன் வந்தீர்கள்?" என்று நண்பரைக் கேட்டேன். "அது பெரிய கதை!" என்றார் முதலியார். "பாதகமில்லை, சொல்லுங்கள்" என்றேன். ஓமக்குட்டி முதலியார் சொல்லத் தொடங்கினார்:—

நாங்கள் ஜாதியில் நெசவுகாரர்களானாலும் எங்கள் குடும்பத்தில் மட்டும் இரண்டு தலைமுறையாய் நெசவு கிடையாது. என்னுடைய பாட்டனார் எங்கள் ஊரிலேயே பெரிய பண்ணைக்காரரா யிருந்தார். ஆனால் என் தகப்பனார் காலத்தில் எங்கள் சொத்தெல்லாம் பலவழியிலும் அழிந்துவிட்டது. என்னையும் என் தாயாரையும் ஏழைகளாய் விட்டுத் தந்தை இறந்து போனார். அப்பொழுது எனக்கு மூன்றே வயது, கடன்காரர்கள் எங்கள் சொத்தெல்லாம் எடுத்துக்கொண்டு விட்டார்களாம்.

என் தாயைப் பெற்ற பாட்டனார் ஒருவர் இருந்தார். அவர் அப்போது எங்களுடன் வந்து வசிக்கத் தொடங்கினார். அவர் கிழவர், வேலைசெய்யத்தள்ளாதவர், ஆனால் நல்ல கெட்டிக்காரர். எங்களுக்கு மிஞ்சிய சொற்ப நிலத்தின் சாகுபடிக்கு வேண்டிய ஏற்பாடு செய்து குடும்ப காரியங்களைச் சீர் பெற நடத்தி வந்தார். நான் தினந்தோறும் பகலில் எங்கள் மாடுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வருவேன். மாலை வீட்டுக்கு வந்து மாடுகளைக் கட்டிவிட்டுப் பாட்டன் பக்கத்தில் உட்கார்வேன். அவர் இராமாயண, பாரதக் கதைகள் சொல்வார். விக்கிரமாதித்யன் கதை, தேசிங்குராஜன் கதை முதலியனவும் சொல்வார். இவைகளையெல்லாம் நான் மிகவும் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

ஒரு நாள் அவர் நளன் கதை சொல்லிக் கொண்டிருந்தார். தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்பதாக நளனுக்குச் செய்தி வந்த இடத்தில் அவர் கதையை நிறுத்தி, "உடம்பு சரியாயில்லை, அப்பா! ஏதோ ஒரு மாதிரியாயிருக்கிறது. பாக்கிக் கதை நாளைக்குச் சொல்கிறேன்" என்றார்.

கதையை அவர் முடிக்கவேயில்லை. மறுநாள் அவருக்கு உடம்பு அதிகமாய் விட்டது. ஊரார் அவர் செத்துப்போய் விடுவாரென்று பேசிக் கொண்டதைக் கேட்டேன். செத்துப்போவதென்றால் எனக்கு அப்போது முழுதும் புலப்படவில்லை. எலி, பெருச்சாளி, பூச்சியின் சாவு தான் தெரியும். ஆனாலும் எல்லாரும் பேசிக்கொள்வதைக் கேட்டு ஒரு வித துக்கம் உண்டாயிற்று. அதைவிடக் கதை பாக்கியாய் நின்று விட்டதே என்ற துக்கந்தான் அதிகமாயிருந்தது. எனக்கு இப்போது நன்றாய் ஞாபகமிருக்கிறது; அவர் அருகில் சென்று "தாத்தா! நீ செத்துப்போகிறாயா? வேண்டாம்! கதையை முடிக்காமல் செத்துப் போகவேண்டாம்" என்று சொல்லி அழுதேன். அப்போது அவர் புன் சிரிப்பு சிரித்து "குழந்தாய்! இதற்காக நீ வருத்தப்படாதே. நீ புத்தகம் படிப்பதற்குக் கற்றுக்கொள். நான் உனக்குச் சொன்ன கதைகளைவிட இன்னும் எவ்வளவோ நல்ல கதைகள் புத்தகங்களில் இருக்கின்றன. நீ படிக்கக் கற்றுக்கொண்டால், ஆயிரங் கதைகள் படிக்கலாம். மற்றவர் களுக்கும் சொல்லலாம்" என்றார். மறுநாள் அவர் இறந்து போனார்.

* * * *

பாட்டன் கூறிய வார்த்தைகளை நான் மறக்கவே யில்லை. எங்கள் ஊருக்கு அடுத்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. தாயிடம் உத்திரவு பெற்று அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போனேன். எழுத்துக் கூட்டிப் படிக்கத்தெரியும் வரையில் தான் அங்கே இருந்தேன். வீட்டு வேலை, வயல் வேலைகளைக் கவனிக்கவேண்டி யிருந்தது. ஆனால் படிப்பதை மட்டும் விடவில்லை. எங்கே, யாரிடத்தில் கதைப்புத்தகம் இருந்தாலும் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக்கொண்டு வந்து விடுவேன். விளங்கினாலும், விளங்காவிட்டாலும் தட்டுத்தடுமாறி வாசித்து முடிப்பேன். ஒரு கந்தல் ஏடு அகப்பட்டால்கூட விடுவதில்லை. இவ்வாறு இராமா யணம், பாரதம், கந்தபுராணம், நள மகாராஜன் கதை, அரிச்சந்திர மகா ராஜன் கதை, விக்கிரமார்க்கன் கதை, அல்லி அரசாணி மாலை முதலிய பல நூல்கள் படித்து முடித்தேன்.

இப்படிப் பல வருஷம் சென்றன. ஒரு நாள் எனக்கு ஒரு "நாவல்" கிடைத்தது. ஆஹா! அதைப் படித்தபோது நான் அடைந்த சந்தோஷத் தைச் சொல்லி முடியாது. அதுமுதல் நாவல் பைத்தியம் என்னை நன்றாய்ப் பிடித்துக் கொண்டது. ஒரு முறை எங்கள் ஊரிலிருந்து சிலர் கிறிஸ்மஸ் வேடிக்கை பார்க்கப் பட்டணத்திற்கு வந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து வந்தேன். அவர்களெல்லாம் ஏதேதோ சாமான் கள் வாங்கிக்கொண்டு திரும்பினார்கள். நான் என்ன செய்தேன் தெரி யுமா? மூர் மார்க்கெட்டில் பழைய கிழிந்த நாவல்களில் ஒரு கட்டு வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தேன். இரவு பகல் ஒரே மூச்சாக அவை

களை வாசித்து முடித்தேன். இப்பொழுது நினைத்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. குப்பைத் தொட்டியில் போடுவதற்கே தகுந்தவை என்று இப்போது நான் கருதும் நாவல்களை அப்போது எத்தனை ஆவலுடன் படித்தேன்?......

[ "இருக்கட்டும். நீங்கள் என்னைக் கேலிசெய்வதில்லை யென்று உறுதி கூறினல் தான் இனிமேல் கதை சொல்லுவேன்" என்றார் ஓமக்குட்டி முதலியார். "ஒரு நாளும் கேலிசெய்ய மாட்டேன். சொல்லுங்கள்" என்றேன். ]

சாதாரணமாய் நாவல்கள் எப்படிப்பட்டவை யென்பது உங்களுக்குத் தெரியுமே. எல்லாம் காதல் மயம். நமது வாழ்வுக்குச் சற்றும் பொருந்தாதவை. ஆனல் நான் அப்போது பதினெட்டு வயது வாலிபன். இவ்வளவு தூரம் பகுத்தறியும் சக்தி எனக்கில்லை. ஆகவே மேற்படி நாவல்களைப் படித்ததின் பயனுகக் காதலைப் பற்றியும், விவாகத்தைப்பற்றியும், வருங்கால வாழ்வைப்பற்றியும் ஏதேதோ மனோ ராஜ்யம் செய்யத் தொடங்கினேன்.

எங்கள் கிராமத்தில் அப்பொழுது பெரிய பணக்காரர் அப்புக்குட்டி முதலியார். அவர் தான் கிராம முனிசீப்பு கூட. அவருக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் தெய்வயானை. இப்பொழுது நினைத்துப் பார்த்தால் அவள் சர்வ சாதாரணமான ஒரு பெண் என்றே தோன்றுகிறது. ஆனல் அப்போது "நாவல்" கண்ணுடன் பார்த்த எனக்கு அவள் அப்ஸர ஸ்திரீயைப்போல் காணப்பட்டாள். பூலோகத்திலும் சரி, தேவலோகத்திலும் சரி, அவளைப் போன்ற அழகி வேறொருத்தி இல்லை யென்று நிச்சயமடைந்தேன். புத்தகத்தில் படித்த கதா நாயகர்களைப் போலவே நானும் அவளைக் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால் உயிர் பிழைத்திருக்க முடியாதென்று உறுதி கொண்டேன்.

இது வரையில் நாவல் படிப்பு பயன்பட்டது. இதற்கு மேல் என்ன செய்வதென்பதற்கு நாவல்களில் உதவி கிடைக்கவில்லை. நானே தன்னந் தனியனான வாலிபன்; தகப்பனற்றவன்; ஏழை. அப்புக் குட்டி முதலியாரோ பெரும் பணக்காரர்; ஊருக்கு எஜமானர். அவரிடம் போய் "உன் பெண்ணைக் கொடு" என்று கேட்டால் கட்டி வைத்து அடிப்பார். நாவல்களில் படித்ததுபோல் பெண்ணை நேரில் பார்த்து என் காதலை வெளியிடுவதற்கு வேண்டிய தைரியம் இல்லை. அதெல்லாம் நாவல்களில் நடக்கும். வாழ்க்கையில் நடை பெருது. ஆகவே ஓயாமல் சிந்தித்த வண்ணமிருந்தேன். கடைசியாக ஒரு யுக்தி தோன்றிற்று. அந்த ஊரில் சமீபத்தில் கள்ளு, சாராயக் கடைகள் ஏலம்போட விருந்தார்கள். அந்தக் கடைகளை நான் ஏலம் எடுப்பதென்று தீர்மானித்தேன். விரைவில்

பணஞ் சம்பாதித்து அப்புக் குட்டி முதலியாருக்குச் சமமாவதற்கு இது ஒன்று தான் வழியென்று எண்ணினேன்.

* * * *

தன் நகைகளை விற்றும் பத்துப் பன்னிரண்டு வருஷங்களில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்தும் என் தாயார் 200 ரூபாய் வரையில் பணம் வைத்திருந்தாள். ஏலப் பணம் கட்டுவதற்கு அத்தொகையைக் கொடுக்கும்படி கேட்டேன். தாயார் முதலில் ஆட்சேபித்தாள். "அந்தப் பாவத்தொழில் நமக்கு வேண்டா மப்பா. ஏதோ உள்ளதை வைத்துக் கொண்டு திருப்தி யடைவோம்" என்றாள். நான் பிடிவாதம் பிடித்த தன் மேல் அவள் "குழந்தாய்! நம்முடைய குடும்ப சொத்தெல்லாம் எப்படி அழிந்தது தெரியுமா?" என்று கேட்டாள். "தெரியாதே! எப்படி?" என்றேன். "எல்லாம் உன் தகப்பன் குடித்தே ஒழித்துப் போட்டான். அந்தப் பாவம் என்னத்திற்கு?" என்றாள். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. இது வரையில் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. ஆனால் தெய்வயானையை நினைத்துக்கொண்டேன். தாயார் சொன்ன செய்தியிலிருந்து என்னுடைய தீர்மானம் உறுதிப்பட்டதே யல்லாது வேறில்லை. "அம்மா! கள்ளுக்கடையில் போன சொத்தைக் கள்ளுக்கடை மூலமாகவே திரும்பச் சம்பாதித்துத் தீருவேன். அது தான் தெய்வத்தின் சித்தம். இல்லாவிட்டால் எனக்கேன் இந்த யோசனை தோன்ற வேண்டும்?" என்றேன்.

கள்ளுக்கடைக்குப் போட்டி அதிகம். எடுக்க முடியவில்லை. சாராயக் கடை மட்டும் எடுத்தேன். வியாபாரம் நன்றாய் நடந்தது. உத்தியோகஸ்தர்களுக்கு அதிக பணம் கொடுத்தேன். ஆனால் என் கையிலும் பணம் அதிவேகமாகச் சேர்ந்து கொண்டு வந்தது. அடுத்த வருஷம் கள்ளுக்கடை சாராயக்கடை இரண்டையும் எடுத்தேன். அப்புக் குட்டி முதலியாருடைய பெண்ணுக்காகச் செய்த இவையெல்லாம் அவர் மனதில் பொறாமையைத் தான் உண்டாக்கின. ஏனெனில் அப்போது அவருடைய கை இறங்கி வந்தது. கடன் அதிகமாயிற்று. "கள்ளுக்கடைக்காரப் பயல்" என்று என்னைப்பற்றி அவர் அவமதிப்பாய்ப் பேசியதாய்க் கேள்விப்பட்டேன். இவருடைய அகம்பாவத்தை அடக்குவது எப்படி என்று ஓயாமல் சிந்தித்துக்கொண்டு வந்தேன். என் எண்ணம் நிறைவேறுவதற்கான ஒரு சம்பவம் விரைவிலேயே நடந்தது. கடவுள் என் பக்கம் இருக்கிறாரென்று தோன்றிற்று!

["ஐயோ! கடவுளை எத்தனை யெத்தனை இழிவான காரியங்களுக்கெல்லாம் நாம் உடந்தை யாக்குகிறோம்?" என்றார் நண்பர் இடையில். "கதையைச் சொல்லுங்கள்" என்றேன்.]

ஒரு சமயம் அப்புக்குட்டி முதலியார் தமது குடும்பத்துடன் ஏதோ வியாதி சொஸ்தப்படுத்திக்கொள்ளப் பட்டணத்துக்கு வந்து ஆறுமாத மிருந்தார். இங்கே அவர்களுக்கு பந்துக்கள் பலர் இருக்கிறார்கள். அவர் திரும்ப ஊருக்கு வந்த அன்று அவருடைய ஆள் ஒருவன் சாராயக் கடைக்கு வந்து ஒரு புட்டி சரக்கு வாங்கிக்கொண்டு போனான். எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. பட்டணத்தில் பந்துக்கள் வீட்டில் கற்றுக் கொண்டார் போலும் என்று எண்ணினேன். மூன்று நாள் கழித்து மறுபடியும் ஆள் வந்து ஒரு புட்டி வாங்கிப் போனான். அப்போது எனக்குண்டான சந்தோஷத்தை அளவிட முடியாது. "சரி, முதலியார் நமது வலையில் வீழ்ந்தார். அவர் கர்வம் ஒழிந்தது. இந்த ஊரில் நம்மைத் தவிரக் கடன் கொடுப்பார் யாருமில்லை. தெய்வயானை நம்மைத் தப்பி எங்கே போகிறாள்?" என்று இவ்வாறெல்லாம் ஆகாசக் கோட்டை கட்டினேன்.

* * * *

எல்லாம் நான் எண்ணியபடியே நடந்து வந்தது. ஒரு வருஷத்திற்குள் அப்புக்குட்டி முதலியார் ஊரறிந்த பெருங் குடிகாரர் ஆனார். கடன் விஷம்போல ஏறிவந்தது. ஏராளமான பூமி அவருக்கு இருந்தாலும் வட்டி கொடுப்பது எளிதன்று. நிலம் விற்றுக் கடன் தீர்ப்பதற்கு நிலத்தை வாங்குவார் யாருமில்லை. இந்த நிலைமையில் ஒரு கோர்ட்டு வாரண்ட் அவர் மீது பிறந்தது. வாரண்டில் தப்புவதற்காகக் கையிலிருந்த சர்க்கார் கிஸ்திப் பணத்தைக் கொடுத்து விட்டார். இவர் குடிகாரரென்றும், கடன்காரரென்றும் மொட்டை விண்ணப்பத்தின் மூலம் அதிகாரிகளுக்குத் தெரிந்து சோதனைக்கு வந்து விட்டார்கள். முதலியார் தம் கர்வத்தை யெல்லாம் விட்டு என்னிடம் ஓடி வந்தார். கெஞ்சாத கெஞ்சுக் கெஞ்சினார். காலில் விழாத தோஷந்தான். 800 ரூபாய் கடன் கொடுத்து அவர் தலைக்கு வந்த விபத்திலிருந்து தப்புவித்தேன்.

நான் கொஞ்சம் குறிப்புக் காட்டியது தான் தாமதம், முதலியார் தெய்வயானையை எனக்குக் கலியாணம் செய்து கொடுப்பதற்குத் தம் பூரண சம்மதத்தைத் தெரிவித்தார். விவாகத்திற்கு நாள் குறிப்பிடுவது தான் பாக்கி. இந்த சமயத்தில் அப்புக்குட்டி முதலியார் ஒரு நாள் திடீரென்று மரண மடைந்தார். நல்ல திட தேகியாயிருந்த அவர் இப்படி அகால மரண மடைந்ததற்கு மிதமிஞ்சிய குடி தான் காரணமாயிருக்க வேண்டும். இந்தத் துக்க சம்பவத்தினால் என்னுடைய உத்தேசங்களைப் பற்றிப் புனராலோசனை செய்யவேண்டியதா யிருந்தது. இப்பொழுது நான் தெய்வயானையை விவாகம் செய்து கொண்டால் அவளுடைய குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். ஏனெனில் அவர்கள் வீட்டில் வயது வந்த ஆண் மக்கள் யாருமில்லை.

அப்புக்குட்டி முதலியாருடைய இரண்டாந்தாரம் சிறு பெண். அவளும் அவளுடைய கைக் குழந்தையும், தெய்வயானையுந்தான் வீட்டிலுள்ளவர்கள். இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பையும், குடும்பத்தின் கடனைத் தீர்த்து சீர்ப்படுத்தும் பொறுப்பையும் நானே வகிக்கவேண்டியவனுவேன். இப்படி யெல்லாம் மனதில் சந்தேகங்கள் உண்டாயின. ஆனாலும் முடிவில் தெய்வயானையை மணந்து தான் தீரவேண்டும் என்று தீர்மானித்தேன்.

இப்போதெல்லாம் கள்ளு, சாராயக் கடைகளுக்கு நானே நேரில் போவதில்லை. சம்பள ஆள்கள் வைத்திருந்தேன். அன்றாடம் சாயங்காலத்தில் மட்டும் சென்று கூடுமுதல் தொகையை வாங்கிக்கொண்டு வருவேன். ஒரு நாள் அவ்வாறு சென்றபோது, கிராம முனிசிப்பு வீட்டு வேலைக்காரன் அப்பொழுது தான் கையில் புட்டியுடன் கடையிலிருந்து வெளியே வருதைக் கண்டேன். என்னைப்பார்த்ததும் அவன் சாலையோரமாய்ப் பதுங்கிக்கொண்டு சென்றான். "இவன் இப்போது யாருக்குச் சாராயம் வாங்கிப் போகிறான்?" என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏதோ ஒரு குருட்டு எண்ணத்தினால் அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று தோன்றிற்று. ஆகவே அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன். அவன் ஊர்த்தெருவின் கொல்லைப் புறமாய்ச்சென்று அப்புக்குட்டி முதலியாரின் கொல்லை வாயிற்படி வழியாய் நுழைந்தான். இதை முற்றும் ஆராயவேண்டுமென் றெண்ணி, தெரு வீதிக்குச் சென்று முதலியார் வீட்டுக்குள் நுழைந்தேன். நடைக்குச் சென்றதும் சிறிது தயங்கி உள்ளே எட்டிப்பார்த்தேன். அப்போது நான் கண்ட காட்சி இடி விழுந்தாற்போல் என்னைத் திகைக்கச்செய்து விட்டது.

தெய்வயானையும் அவளுடைய சிறிய தாயாரும் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந் திருந்தார்கள். முதலியார் மனைவி கையில் சாராயப் புட்டி. இரண்டு டம்ளர்களில் ஊற்றி ஒன்றை தெய்வயானையிடம் கொடுத்து மற்றொன்றைத் தான் அருந்த ஆரம்பித்தாள். பல வருஷ



காலமாக என் உள்ளத்தில் வளர்ந்துவந்த காதல் அத்தனையும் அந்த ஒரு

க்ஷணநேரத்தில் விஷமாகிவிட்டது. சொல்ல முடியாத அருவருப்பு எனக்குண்டாயிற்று. சத்தம் செய்யாமல் வெளியே வந்து அவசரமாக வீடு வந்து சேர்ந்தேன்.

என் மனோரதத்தில் இடி விழுந்தது. என் ஆசை யெல்லாம் நிராசையாயிற்று. முதலில் அப்பு முதலியார் வீட்டில் சாராயப் புட்டி புகுந்ததைப் பார்த்தபோது நான் ஆசைப்பட்ட பழம் கிட்டிவிட்டது என்று சந்தோஷப்பட்டேன். வீட்டிற்குள் சென்ற அந்த சாராயப் புட்டி பின்னால் செய்த வேலை, அந்தப் பழம் விஷமாய்ப் போவதற்குக் காரணமாயிற்று. அளவில்லாத துக்கத்துடன் அன்று படுத்தேன். பாட்டன் சொன்ன பழங் கதைகளெல்லாம் நினைவுக்கு வந்தன. நாவல்கள் எல்லாம் ஆபாசமாய்த் தோன்றின.

அதற்குப் பிறகு ஒரு வாரத்திற்குள் கள்ளு சாராயக் கடைகளைத் தொலைத்துத் தலை முழுகினேன். அக் கடைகளில் சம்பாதித்த சொத்தை யெல்லாம் அந்த ஊர்க்கோவிலுக்கும், பஜனை மடத்துக்கும், பள்ளிக்கூடத்துக்குமாகப் பகிர்ந்து எழுதி வைத்தேன். இந்த தர்மங்கள் சரிவர நடப்பதற்கு ஏற்பாடு செய்தேன். கையில் கொஞ்ச ரூபாய் எடுத்துக் கொண்டு தாயாரும் நானும் இந்தச் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தோம்.—என்று கூறி நண்பர் கதையை முடித்தார்.

## குடியும் குடியரசும்

உலகெங்கும் தற்போது ஜன நாயகம் பரவி வருகிறது. இந்தியாவிலும் ஜன நாயக ஆட்சி வேண்டு மென்றே நாம் கிளர்ச்சி நடத்தி வருகிறோம். ஜன நாயகம் என்றால் என்ன? தேசத்தின் அரசாங்கப் பொறுப்பும் உரிமையும் தனிப்பட்ட ஒருவர் கையிலோ, அல்லது ஒரு சிலர் கையிலோ இருப்பதற்குப் பதிலாக நாட்டிலுள்ள சர்வ ஜனங்களுக்கும் பொது உடைமையாதலே.

இத்தகைய ஜன நாயகம் பரிபூரண மாக வேண்டுமானால் நாட்டில் பிறந்த வயது வந்த ஆண், பெண் மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும். வாக்குரிமையாவது யாது? தாலுகா போர்டு, ஜில்லா போர்டு, மாகாண சட்டசபை, இந்தியா சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்குப் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பாத்தியமே வாக்

குரிமை அல்லது "வோட்" என்று சொல்லப்படுகிறது. இந்த பாத்தியம் இப்பொழுது ஒரு தொகை கிஸ்து அல்லது வரி செலுத்துபவர்களுக்குத்தான் உண்டு. இன்னும் சில நிபந்தனைகளும் இருக்கின்றன. இந்த நிபந்தனைகள் ஒன்றுமில்லாமல், சொத்து இருப்பினும் இல்லாவிடினும், வரி செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் தேசத்தில் பிறந்த வயது வந்த எல்லோருக்கும் வோட்டுரிமை ஏற்பட்டால் அதுவே முழு ஜன நாயகமாகும். இதற்கு சர்வஜன வாக்குரிமை என்று பெயர்.

தற்போது உலகில் முன்னேற்ற மடைந்த பல தேசங்களில் இத்தகைய சர்வஜன வாக்குரிமை இருந்து வருகிறது. நமது இந்தியா தேசத்திலும் சர்வஜன வாக்குரிமை ஏற்படவேண்டு மென்பது நம்முடைய கோரிக்கை. சர்வஜன வாக்குரிமையை ஆதாரமாகக்கொண்டே காங்கிரஸில் சுயராஜ்ய திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். இதைப் பற்றி ஆலோசிக்க ஏறக்குறைய தேசத்திலுள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், சமூகத் தலைவர்களும் சேர்ந்து கல்கத்தாவில் ஒரு மகா சபை கூடினார்கள். இந்த மகா சபையில் சர்வஜன வாக்குரிமை இருக்கத்தான் வேண்டுமென்று ஒருமுகமாய்த் தீர்மானிக்கப்பட்டது.

சர்வஜன வாக்குரிமை கூடாதென்று சொல்பவர்கள் இத்தேசத்தில் ஒரு சிலரே யிருக்கின்றனர். இவர்களும் இப்போது தேசம் அதற்குத் தயாராயில்லை யென்றும், இன்னும் சிறிது காலம் போகவேண்டுமென்றுந் தான் சொல்லுகிறார்கள். ஆகவே இன்றில்லாவிட்டால் நாளையோ, நாளையில்லாவிடில் மறுநாளோ சர்வஜன வாக்குரிமை ஏற்படப்போவது நிச்சயம்.

கட் குடிக்கும் வாக்குரிமைக்கும் என்ன சம்பந்தமென்று இப்பொழுது பார்ப்போம். ஜன நாயக ஆட்சியில் வாக்காளர்களே அரசாங்க நிர்வாகத்துக்கு அஸ்திவாரமாவார்கள். அவர்கள் தங்கள் வாக்குரிமையைச் சரியான முறையில் பயன்படுத்தினால்தான் அரசியல் காரியங்களை நியாயமாகவும் ஒழுங்காகவும் நடத்தத்தகுந்த பிரதிநிதிகளும் அதிகாரிகளும் நியமிக்கப் பெறுவார்கள். ஆனால் ஏழை ஜனங்கள் கள்ளு, சாராயத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் வரையில் தங்கள் வாக்குரிமையைச் சரியான முறையில் பயன்படுத்த முடியாது.

ஜன நாயகம் நேர் முறையில் நடக்கவேண்டு மானால் கள்ளு சாராயக் கடைகள் ஒழிய வேண்டும். மதுவிலக்கு இல்லாவிட்டால் குடியரசு என்பது கள்ளுக்குடி யரசாகவே முடியும். சாதாரணமாய் கள்ளுக்கு அடிமையான ஏழை யொருவனுக்கு "தண்ணி போட நாலணா தருகிறேன்." என்றால் அவன் எத்தகைய முரட்டுக் காரியத்துக்கும் தயாராயிருப்பதைக் காண்கிறோம். இப்படிப்பட்டவர்களிடம் கள்ளுக்கு

"வோட்" வாங்குவது மிகவும் சுலபமாயிருக்கும். அரசாங்கம் பொது உடைமையாயிருக்க வேண்டுமென்பது ஜன நாயகத்தின் அடிப்படை. ஆனால் கள்ளுக்கடை ஒழியாதிருக்கும் வரையில் யாராவது ஒருவர் அல்லது ஒரு கூட்டத்தார் ஏழைகளுக்குக் கள் வார்த்துப் பொது உடைமையைத் தங்கள் சொந்த உடைமையாகச் செய்து கொள்வார்கள்.

கள்ளுக்கு வோட்டு வாங்கிய பிரதிநிதிகள் தங்கள் சுயநலத்தையே பெரிதாய்க் கருதுவார்கள். அவர்கள் கையில் அரசாங்க நிர்வாகம் சீர் கெடும். லஞ்சமும் இன்னும் பல தீமைகளும் பெருகும். பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அவர்கள் மதிக்கமாட்டார்கள். எப்படியும் கள் ஊற்றி வோட்டுப் பெறலாமென்று அவர்கள் தைரிய மாயிருப்பார்கள்.

இப்பொழுதே இத்தகைய நிலைமை ஓரளவு இருந்து வருகிறது. சட்டசபை, தாலுகா போர்டு, ஜில்லா போர்டு, நகர சபைத் தேர்தல்களில் அபேட்சகர்கள் மதுபான வோட்டு முறையைத் தாராளமாய்க் கையாளுகிறார்கள். சிலர் தேர்தலுக்கு முன் ஒருவாரத்துக்குக் கள்ளு சாராயக் கடைகளைக் குத்தகையாக எடுத்துக் கொள்கிறார்கள். தேர்தல் ஏஜண்டுகள் தாங்களும் குடித்து வோட்டர்களையும் திரட்டிவந்து குடிக்கப்பண்ணுகிறார்கள். தேர்தல் நாட்களில் மட்டும் பகிரங்க அரசாங்க உத்திரவுப்படி கடைகள் மூடப்படுவதினால் பயனில்லை. அன்று கடைகள் மூடியிருந்தாலும் கள்ளு சாராயம் வார்க்க அநேக வழிகள் அவர்களுக்குத் தெரியும். இப்பொழுதே இப்படியானால் சர்வஜன வாக்குரிமை ஏற்படும்போது நிலைமை இன்னும் மோசமாகும்.

இப்படியாக, கள்ளின் மூலம் வாக்குகளை எளிதில் விலைக்கு வாங்கக் கூடியதாயிருக்கும் தீமை ஒன்று. பணத்துக்கு வோட்டு வாங்குவதை விடக் கள்ளுக்கு வாங்குவது சுலபம். இரண்டாவது, கள்ளு சாராயங் குடித்துப் போதை கொண்ட மக்கள் தங்கள் அறிவைப்பயன் படுத்தி யோசனை செய்தல் இயலாத காரியம். அரையில் ஆடை இருக்கிறதா இல்லையா, தரையில் நடக்கிறோமா ஆகாசத்தில் பறக்கிறோமா என்பது கூடத் தெரியாமலிருப்பவர்கள் அபேட்சகர்களுடைய தாரதம்மியங்களை அறிந்து வாக்குக் கொடுக்க எவ்வாறு இயலும்? அந்நிலையில் அவர்களிடம் 'அண்டிமாண்டு' பத்திரத்தில் கூடக் கையெழுத்து வாங்கிவிடலாம். வோட்டு வாங்குவதுதானா கஷ்டம்? அவர்கள் தேர்தல் ஏஜண்டுகள் ஆட்டிவைக்கும் பொம்மைகளாகவே யிருப்பார்கள்.

மதுவிலக்கு இல்லாத ஜனநாயகம் பயன்படாதென்பதற்கு மூன்றாவது காரணம் ஒன்றிருக்கிறது. குடிப்பழக்கம் நாளடைவில் மக்களின் அறிவை மழுங்கச் செய்து விடுகிறது. போதையில்லாத சமயத்திலும் குடிகாரர்களுக்கு நிதானம், பகுத்தறிவு, மனவுறுதி இராது. ஆகவே

தேர்தல் தினத்தன்று அவர்கள் குடிக்காமல் சுயபுத்தியுடன் இருந்தால் கூட, அபேட்சகர்களுக்குள் இவன் யோக்கியன், இவன் அயோக்கியன், இவன் தகுந்தவன், இவன் தகுதியற்றவன் என்று பலர் பலவிதமாய்ச் சொல்லுவதை ஆராய்ந்து யோசித்து முடிவு செய்யும் சக்தி அவர்களுக்கிராது. தங்களுடைய சொந்த விஷயங்களிலும், சாதாரண விஷயங்களிலுங்கூடக் குடிகாரர்கள் புத்தியுள்ள முடிவுக்கு வருவதில்லை. பின்னர் பெரிய அரசாங்க விஷயங்களில் அவர்கள் சரியான முடிவுகள் செய்வதெப்படி? அவர்களைப் பிறர் ஏமாற்றுவது மிக எளிதாயிருக்கும்.

ஆதலின் நம் நாட்டு ஏழை மக்கள் தாங்களும் தங்கள் குடும்பங்களும் சுகமாயும் ஆரோக்கியமாயும் வாழ்வதற்கு மட்டுமன்றி, நாட்டின் அரசியலில் பங்கு எடுத்துக்கொண்டு தேர்தல் முதலிய காரியங்களைச்சரிவர நடத்தவும் மதுவிலக்கு அவசியம். 'நான் குடிப்பது கிடையாது; மற்றவர்கள் பாடு எனக்கு என்ன?' என்று இருப்பது வருங்கால திருஷ்டி இன்மையாகும்.

---




இது பூமண்டலப் படம். 'அ' என்று குறிப்பிட்டிருக்கும் பிரதேசம் தான் அமெரிக்கா. 'இ' என்று குறிப்பிட்டிருப்பது இந்தியா. 'ஆ' என்று குறிப்பிட்டுக் கறுப்பு மையிட்ட தீவு தான் இங்கிலாந்து. இது எவ்வளவு சிறிய தேசம்? ஆனால் இது தான் நம்மை ஆண்டு வரும் நாடு. இந்தியாவைவிட அமெரிக்கா மிகப் பெரியது. ஆயினும் அந்த தேசத்தின் அரசாங்கத்தார் பூரண மது விலக்குச் சட்டம் செய்து விட்டார்கள். அங்கே எந்தவிதமான கள்ளு சாராயக்கடையும் கிடையாது. இந்தியாவின் விஸ்தீரணம் 17 லட்சம் சதுர மைல். அமெரிக்காவின் விஸ்தீரணம் 37 லட்சம் சதுர மைல்; ஜனசங்கியை 12 கோடி.

# சத்துணவு நஷ்டம்

மனிதர்கள் உட்கொள்ளும் உணவைப்பற்றிப் பல மேதாவிகள் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து வந்தார்கள். மனிதர் தேகாரோக்கியத்துடன் பலசாலிகளாய் வாழ்வதற்கு அவர்கள் உண்ணும் உணவு எத்தகையதாயிருக்கவேண்டும் என்று அநேகர் அநேக இடங்களில் தனித்தனியே ஆராய்ச்சிகளும் சோதனைகளும் நடத்தி வந்தார்கள். இவற்றின் பயனாய்ச் சமீபகாலத்தில் ஒரு பெரிய உண்மை கண்டுபிடிக்கப்பட்டது. அது என்னவென்றால், மனிதர் உண்ணும் உணவில் "விடமின்" அல்லது ஜீவசத்து இருக்கவேண்டியது அவசியம்; ஜீவசத்து இல்லாத உணவையே உட்கொள்வோர் நாளடைவில் பலவீனமடைந்து ஆரோக்கியம் குன்றிப் பலவித ரோகங்களுக்கு ஆளாவர் என்பதே. உடம்பின் தசை, நரம்பு, இரத்தம், எலும்பு முதலியவைகளின் போஷிப்புக்காக உட்கொள்ளும் உணவில் தகுந்த அளவு ஜீவசத்து சேர்ந்திருந்தால்தான் அவ்வுணவு பூரண பலன் கொடுக்கும். தற்போது உலகில் உள்ள பெயர் பெற்ற வைத்தியர்கள், தேகதத்துவ சாஸ்திரிகள் முதலியோரில் அநேகமாக எல்லாரும் இந்தப் புதிய "ஜீவசத்து"க் கொள்கையை ஒப்புக்கொள்கிறார்கள்.

ஜீவசத்தில் பலவகை உண்டு. நெல் முதலிய தானியங்களின் தவிட்டில் இருப்பது ஒருவகை ஜீவசத்து. மில்லில் குத்திய வெள்ளை அரிசியில் இந்த ஜீவசத்து கிடையாது. இதற்காகத்தான் கைக்குத்தரிசியையே உபயோகிக்க வேண்டுமென்று இப்போது பலர் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

மற்றொரு வகையைச் சேர்ந்த மிகவும் முக்கியமான ஜீவசத்து பழங்களிலும், பச்சைக் கறிகாய்களிலும் இருக்கிறது. அடுப்பில் வேகவைப்பதால் இந்த சத்து நஷ்டமாகி விடுகிறது. ஆகையினால் தான் பச்சை உணவு கொஞ்சமாவது உட்கொள்ள வேண்டுமென்று தற்காலத்தில் ஆரோக்கிய பிரசாரம் நடந்து வருகிறது.

நெடுங்காலமாகச் சமைத்த உணவே உட்கொண்டு பழக்கமாகி வந்தவர்கள் திடீரென்று எல்லாம் பச்சையுணவாகவே உட்கொள்ளப் புகுதல் உசிதமாகாது. நாட்டில் பெரும்பாலான ஜனங்களுக்கு அது சாத்தியமுமன்று. ஆனால் தினந்தோறும் சமைத்த உணவுடன் கூட ஓரளவாவது பச்சை உணவு சாப்பிட வேண்டியது அவசியம். நம்முடைய சொந்த ஆரோக்கியத்தையும், வருங்கால சந்ததிகளின் ஆரோக்கியத்தையும், தேச நன்மையையும் முன்னிட்டு உணவு விஷயத்தில் இந்தச் சீர்திருத்தத்தை எல்லாரும் கைக் கொள்ளவேண்டும்.

அப்படி இந்த நாட்டு ஜனங்கள் பெரும்பாலோர் தினம் உண்ணக் கூடிய உணவில் பச்சைப் பதார்த்தம் என்ன இருக்கிறதென்பது அடுத்த கேள்வி. நமது நாட்டின் தற்காலக் கொடிய வறுமையை எண்ணிப் பார்த்து இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். கிச்சிலிப் பழத்தில் 'ஜீவசத்து' நிறைய இருக்கிறது. ஆனால் நம்மெல்லாருக்கும் கிச்சிலி முதலிய பழங்கள் கிடைக்கக் கூடியனவா?

நமது தென்னாட்டின் நிலைமைக்குத் தகுந்த பச்சை யுணவுப் பொருள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியது தேங்காய் ஒன்றுதான். அதில் ஜீவசத்தும், மற்றும் உடல் போஷணைக்கு வேண்டிய சத்துக்களும் நிரம்ப உண்டு. தென்னாட்டில் ஏராளமாய்க் கிடைக்கக் கூடிய பொருள்; லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு உணவாகக் கூடியது; எல்லாரும் விரும்பிச் சாப்பிடக்கூடியது; சாஸ்திர சம்மதமானது. மற்ற உணவுப் பொருள்களை உத்தேசிக்கும்போது விலையும் கிராக்கியன்று. தேங்காய் உணவுக்கு விரோதமாய்ச் சொல்லக்கூடிய ஆட்சேபம் ஒன்று கூடக் கிடையாது.

இத்தகைய உத்தமமான சத்துணவு கள்ளிறக்குவதால் அநியாயமாய் நஷ்டமாகி வருவதை நினைத்தால் யார் தான் மனங் கலங்காதிருக்க முடியும்? கள்ளினால் தேசத்துக்கு விளையும் பல பெருந் தீங்குகளில் இதுவும் ஒன்றாகும். கொத்துக் கொத்தாய்த் தேங்காய்க் குலைகள் தொங்க வேண்டிய மரங்களில் தற்போது கள்ளுப் பானைகள் தொங்குகின்றன. தேகாரோக்கியத்தையும், பலத்தையும், தேஜஸையும் அளிக்கக்கூடிய அமிர்த ரசத்தை விஷமாக மாற்றி அருந்தி ஜனங்கள் உடல் நலத்தையும் ஆத்ம நலத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

தென்னை மரங்களின் சொந்தக்காரர்கள் முன்பணம் வாங்கிக் கொண்டு தங்கள் மரங்களைக் குத்தகைக்கு விடுவதால் லாபம் பெறுவதாக எண்ணுகிறார்கள். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது உண்மை மொழியானால், அவர்களும் தேசமும் அடைவது நஷ்டமேயாகும். அந்த மரங்கள் அளிக்கக்கூடிய இளநீரையும் தேங்காயையும் அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் மற்றவர்களும் சாப்பிட்டு வந்தால் கள்ளுப் பணத்தைவிடப் பதின்மடங்கு லாபமாகும்.

நாட்டிலிருந்து கள்ளை ஒழிப்பதற்கு, உயரிய ஜீவசத்துணவு நஷ்டமாகிறதென்னும் இந்த ஒரு காரணமே போதும். நாட்டு மக்களின் நன்மையில் கருத்துள்ள ஓர் அரசாங்கத்தார் இந்த ஒரு காரணத்தைக் கொண்டே கள்ளை ஒழித்து விடுவார்கள். ஆனால் நமது சர்க்காருக்குத் தற்கால வருமானம் ஒன்றே பிரதானம். ஜனங்கள் எக்கேடு கெட்டால் அவர்களுக்கென்ன கவலை?

## ரயில்வே சங்கங்களுக்கு

ரயிலில் வேலை செய்து வரும் இந்திய வாலிபர்களே, ஜாக்கிரதை! பீர் குடிப்பதும் கள்ளுக் குடிப்பதும் ஒன்றே. மேஜை நாற்காலிகள் போட்ட நல்ல அறைக்குள் ஒரு புட்டி பீர் குடித்தால் அவ்விதம் உட்கொள்ளும் மதுஸாரமும், கள்ளுக்கடைக்குப்போய் அரைப் புட்டி கள்ளுக் குடித்து உட்கொள்ளும் மதுஸாரமும் ஒன்றேதான். விலை அதிகம் கொடுத்தால் இழிவான வழக்கம் மேன்மையாகிவிடாது. ஏமாந்து போகாதீர்கள். நம்முடைய நற்பழக்கங்களை மற்றவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அவர்களுடைய தீய வழக்கங்களை நாம் கற்றுக் கொள்ளக் கூடாது. சிறிதாய் வேடிக்கையாய் ஆரம்பிப்பது பெருந் தீமையாய் முடியும். பீரிலாவது ஒயினிலாவது வுஸ்கியிலாவது தேகத்திற்கு உணவு பலம் ஒன்றும் கிடையாது. அதிலிருப்பது மதுஸாரம்தான். சாராயத்தில் 100க்கு 50, கள்ளில் 100க்கு 8 பங்கு மதுஸாரம் இருக்கிறது. பீரில் 100-க்கு 4 பங்கு மதுஸாரம். இப்படியிருக்க 14 அணு கொடுத்து ஒரு புட்டி பீர் அதாவது அரைப் புட்டி கள்ளு என் வாங்கிக் குடிக்கவேண்டும்? இது அறிவீனமேயாகும். எல்லாம் இழிவான மதுஸாரம்தான். சீமையில் புட்டியில் போட்டு அரக்கு முத்திரை போட்டதினாலேயே இழிவான பண்டம் உயர்ந்தது ஆகிவிடுமோ?

---

### கிறிஸ்துவ வேதம்.

ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல் நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். (பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம்.)

# மதுவிலக்கு உறுதி மொழி

இது வரையில் மதுவிலக்கு உறுதி மொழிப் புஸ்தகங்களில் கையெழுத்துக்கள் பூர்த்தி செய்து அனுப்பிய கனவான்கள் :—

| | | | |
|---|---|---|---|
| 1. | தளவாய்ப்பேட்டை ராகவாசாரியார் | 300 | கையெழுத்துகள் |
| 2. | நடுவலூர் செல்லமுத்துப் படையாச்சி | 127 | ,, |
| 3. | M. G. வாஸுதேவய்யா | 142 | ,, |
| 4. | காவேரிப்பட்டணம் தீர்த்தகிரி மணிகாரர் | 500 | ,, |
| 5. | பெத்த வடகூர் ஸ்ரீராம ரெட்டியார் | 275 | ,, |
| 6. | திருப்பத்தூர் ஜெ. சின்னையா | 400 | ,, |
| 7. | பள்ளிகொண்டா K. M. முருகேச முதலியார் | 500 | ,, |
| 8. | பொத்தனூர் ரெங்காசாரியார் | 1000 | ,, |
| 9. | திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை | 500 | ,, |
| 10. | பொன்னேரி ரெ. வைர முதலியார் | 1000 | ,, |
| 11. | அரசாணிமங்கலம் துளசிங்கம் பிள்ளை | 240 | ,, |
| 12. | ஆரணி செங்கல்ராய செட்டியார் | 425 | ,, |
| 13. | பொட்டையம்பாளையம் ரா. துரைசாமி | 600 | ,, |
| 14. | மாயனூர் M. K. இராமச்சந்திர அய்யர் | 500 | ,, |
| 15. | கொமாரபாளையம் ஜங்கமேசுவர செட்டியார் | 240 | ,, |

புஸ்தகம் வாங்கிக் கொண்டவர்கள் கையெழுத்துக்கள் பூர்த்தி செய்து கூடிய சீக்கிரம் அனுப்புமாறு கோரப்படுகிறது. மதுவிலக்கு உறுதி மொழி அடியிற் கண்டவாறு :—

> "நம்முடைய நாட்டில் தருமமும் பொருளும் இன்பமும் வளர்ந்து அனைவரும் க்ஷேமமாயும் சுகமாயும் வாழ, கள்ளு, சாராயம், அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை முற்றிலும் ஒழிக்கும் சட்டங்களை உடனே செய்வது அவசியமென்றும், அவ்வித சட்டங்களைச் செய்வதற்கு நான் ஆதரவாயிருப்பேனென்றும், இந்தியா சட்டசபை, சென்னை சட்ட சபை, கிராமம், நகர, தாலுகா, ஜில்லாச் சபைகள் இந்தத் தேர்தல்களில் பூரண மதுவிலக்குக்கு ஆதரவாக உறுதிமொழிக் கையெழுத்திடாத எவருக்கும் நான் வாக்குக் கொடுப்பதில்லை என்றும் உறுதி கூறுகிறேன்."

ஒவ்வொரு புஸ்தகத்திலும் 500 கையெழுத்து வரையில் வாங்கும்படி கோடு வரையப்பட்டிருக்கிறது. புஸ்தகம் வேண்டுவோர் எழுதித் தருவித்துக்கொள்ளலாம்.

## ஊக்கங் கொண்டவர்களுக்கு வேலை

தங்களுடைய ஊரில் ஒரு மதுவிலக்குக் கிளைச்சங்கம் ஏன் ஏற்படுத்தக்கூடாது ?

மாதம் ஒன்றுக்கு 4 அணு சந்தா விகிதம் வைத்து 12 அங்கத்தினர்களைச் சேர்த்தால் மாத வசூல் ரூ. 3 ஆகும். இதில் ஒரு ரூபாய்க்கு "விமோசனம்" பத்திரிகை 12 பிரதிகள் தருவித்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுக்கலாம். மிகுதித்தொகை மாதம் 1-க்கு ரூ. 2. இதைக்கொண்டு மூன்ருவது மாதத்தில் அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்திற்கு பதிவுச்சந்தா (ரூ. 5) செலுத்தி விட்டு கிளைச் சங்கமாகப் பதிவு செய்து கொள்ளலாம். பிறகு மாதம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் காரியதரிசி கையிலிருக்கும். அவ்வப்போது கூட்டங்கள் கூட்டவும் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்துக் கொடுக்கவும் பிரசாரம் செய்யவும் வேண்டிய செலவுக்கு ஆகும். நிரந்தரமாகவும் ஒழுங்காகவும் தங்களுடைய ஊரில் மதுவிலக்கு வேலை நடத்த இது மிகவும் எளிய முறையாகும். நாட்டில் எங்கும் இத்தகைய சங்கங்களும் பிரசாரமும் ஏற்பட்டு அகில இந்தியச் சங்கம் பலப்பட்டால் அரசாங்கத்தார் நம்முடைய கிளர்ச்சிக்கு வணங்கித் தீரவேண்டும்.

மனிதர்களுடைய சரீரத்தையும், சந்ததியையும், புத்தியையும், ஒழுக்கத்தையும், சமூக வாழ்வையும் பாழ்படுத்தி வரும் கொடிய விஷமாகிய மதுபானத்தைப் பிரசார மூலமாயும் அரசாங்கச் சட்ட மூலமாயும் முற்றிலும் ஒழித்தலே மதுவிலக்குச் சங்கங்களின் நோக்கம். மதுவிலக்கையொட்டிய விஷயங்களைத் தவிர்த்து மற்ற யாதொரு விஷயத்திலும் மதுவிலக்குச் சங்கங்கள் எந்த அரசியல் கட்சியோடும் சேர்ந்துகொள்ளாமல் கண்டிப்பாய் விலகி நிற்கவேண்டும். இச்சங்கங்களில் சேரும் அங்கத்தினர்களுக்கு மதுவிலக்கு விஷயங்களல்லாத மற்றவைகளில் தங்கள் தனிப்பட்ட ஹோதாவில் இஷ்டப்படி நடந்து கொள்ளும் பூரண சுதந்திரம் உண்டு.

---

குடியினுல் முன்னுக்கு வந்தவன் ஒருவனை யாராவது பார்த்ததுண்டா? அல்லது எந்த விதத்திலாவது குடியினுல் நன்மையடைந்தவன் என்று ஒருவனைக் காட்ட முடியுமா ?



வீட்டுக்கு புட்டி
வருவதற்கு முன்

புட்டி வந்தபின்

---

இங்கிலாந்தில் புருஷன் மனைவி பிரிவினை வழக்குகளுக்காக ஏற்பட்ட தனிக் கோர்ட்டின் தலைமை நீதிபதி லார்ட் மெர்வி என்பவர் "குடி ஒழிந்து போனால் இந்தக் கோர்ட்டையே மூடிவிடலாம்" என்று அபிப்பிராயம் தெரிவித்தார். நமது தேசத்தில் விவாகப் பிரிவினை என்பது கிடையாது. ஆனால் கணக்கற்ற குடும்பங்களில் இல்வாழ்க்கை நரக வாழ்க்கையாகி யிருப்பதற்குக் குடியே காரணம்.

# ஆட்சேபம் ஒன்றுதான்

"ஞாயிற்றுக் கிழமைகளிலும், மற்றப் பொது விடுமுறை நாட்களிலும், ஸ்தல ஸ்தாபனங்கள், சட்ட சபைகள் முதலியவற்றிற்குத் தேர்தல் நடக்கும் தினங்களிலும் மதுபானக் கடைகளை மூடிவிடவேண்டும்" என்ற கருத்துக்கொண்ட ஒரு தீர்மானம் சென்ற செப்டம்பர் மீ 27உ சென்னை மாகாண சட்ட சபையில் விவாதத்துக்கு வந்தது. பல அங்கத்தினர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். எதிர்த்துப் பேசியவர் கலால் மந்திரி ஸ்ரீமான் எஸ். முத்தையா முதலியார் ஒருவரே! மதுவிலக்குப் பிரசாரத்துக்கு 4 லட்சம் ரூபாய் செலவழிக்கப்போகும் கலால் மந்திரி இந்தச் சிறு யோசனையைக் கூட ஆக்ஷேபமின்றி ஏற்றுக்கொள்ள முன் வராதது ஆச்சரியமே யாகும். யோசனை நல்லதுதான் என்றும், ஆனால் நடத்திவைப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படுமென்றும் வழக்கமான சமாதானங்களை அவர் சொன்னார். முடிவில் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது. 41 அங்கத்தினர் சாதகமாக வாக்களித்தார்கள். எதிராக ஒருவர்கூட வாக்குச் செய்யவில்லை. அரசாங்க அங்கத்தினர்களும் மந்திரிகளும் வோட்டு செய்யவில்லை.

கலால் மந்திரி தீர்மானத்தை எதிர்த்துப் பேசியபோதிலும், முடிவில் தீர்மானம் நிறைவேறி விட்டபடியால் அதை அவர் காரியத்தில் நடத்தி வைப்பாரென்றே நம்புகிறோம். நிற்க.

ஸ்ரீமான் முத்தையா முதலியார் தமது பேச்சில் கூறிய ஒரு விஷயத்தை நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். "பூரண மதுவிலக்குச் செய்வதற்கு ஐந்து கோடி ரூபாய் வேண்டும். அந்த ஐந்து கோடி ரூபாயும் கிடைக்க வழிசொன்னால் இன்றைய தினமே அரசாங்கத்தார் எல்லாக் கடைகளையும் மூடத் தயார்" என்று அவர் கூறியதாகப் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது. இதிலிருந்து மதுவிலக்குச் சட்டத்திற்கு விரோதமாய்ச் சொல்லப்படும் மற்ற ஆட்சேபங்கள் எல்லாம் பொய் ஆட்சேபங்கள் என்றும், பணம் சம்பந்தமான தடை ஒன்றுதான் உண்மையான தடை என்றும் ஏற்படுகிறது. இதைக் கலால்மந்திரி ஒப்புக்கொண்டது பற்றி சந்தோஷப்படுகிறோம்.

ஆனால் பண சம்பந்தமான ஆட்சேபத்தில் நியாயமுண்டா வென்று பார்ப்போம். வருஷா வருஷம் கலால் வருமானம் ஏறிக்கொண்டே போகிறது. அதற்கேற்ப அரசாங்கத்தின் செலவும் அதிகமாகித்

கொண்டே போகிறது. இந்த வருஷத்தில் கலால் மந்திரி "ஐந்து கோடி ரூபாய்க்கு வழிகாட்ட" ச் சொல்கிறார். அடுத்த வருஷம் இதே மந்திரி இருந்தாலும், வேறொருவர் அப்பதவிக்கு வந்தாலும் "ஆறு கோடி ரூபாய்க்கு வழிகாட்ட" ச் சொல்வார்கள். இன்னும் நாலுவருஷம் போனால் எட்டு கோடிக்கு வழிகாட்டச் சொல்வார்கள். இப்படியே நாளாக ஆக, மதுவிலக்குச் செய்தல் கஷ்டமாகிக் கொண்டுதானே போகும்? ஆகவே தள்ளிப்போடுவதில் பயன் என்ன?

மதுவிலக்கில் உண்மையான சிரத்தை யிருந்தால் இப்பொழுதே அதைச் செய்வதுதான் நல்லது. எட்டு கோடி ரூபாய்க்கு வழிசெய்வதைக் காட்டிலும் ஐந்து கோடிக்கு வழிசெய்தல் சுலபம். 1920-ம் வருஷத்தில் சென்னை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கு ஏறக்குறைய நாலு கோடி ரூபாய் கப்பம் செலுத்திவந்தது. இந்தக் கப்பம் முழுதும் சென்ற வருஷத்துடன் இந்திய அரசாங்கத்தார் தள்ளிக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் அவ்வளவு தொகைக்கும் புதிய செலவு ஏற்படுத்தியாகி விட்டது. இந்தப்புதிய செலவுகளைக் குறைத்து அரசாங்கச் செலவை 1921-ம் ஆண்டிலிருந்த நிலைமைக்குக் கொண்டுபோனால் எவ்வித கஷ்டமுமின்றிப் பூரண மதுவிலக்குச் செய்யலாம்.

ஆனால் இவ்வளவுகூட என்னத்திற்கு? மதுவிலக்குச் செய்வதற்குப் பணத்தைத் தவிர வேறு ஆட்சேப மில்லையானால்,ஒரு சில ஜில்லாக்களில் அல்லது ஒரு சில தாலூகாக்களிலாவது உடனே மதுவிலக்கு ஆரம்பிக்கலா மல்லவா? வருஷம் கொஞ்சமாகப் பணத்திற்கு வழி செய்து கொண்டு போதல் சுலபமல்லவா? அரசாங்கத்தார் இது செய்யவாவது முன்வந்தால் அவர்களுடைய பேச்சு உண்மையான பேச்சு என்று சொல்லலாம்.

அரசாங்க மதுவிலக்குக் கமிட்டியில் சேர்ந்த சிலர் முதலில் இப்படித்தான் எண்ணினார்கள். அவர்களில் திவான்பகதூர் எம். இராமச்சந்திர ராவ் என்பவர், அரசாங்கப் பிரசாரத்தின் உண்மைக் குறிகுறியாக ஐந்து தாலூகாக்களிலாவது கள்ளு, சாராயக்கடைகளை மூடிவிடவேண்டுமென்று கலால் கமிஷனரைக் கேட்டார். இந்த யோசனையை முன்னிட்டுச் சேலம் ஜில்லாவில் சில தாலூகாக்களில் கள்ளு, சாராயக்கடைகளின் ஏலத்தை ஊர்ஜிதப் படுத்தாமல் கூட இருந்தார்கள். ஆனால் எல்லாம் வீண் கனவாய் முடிந்தது. கலால் கமிஷனர் அரசாங்கத்தைக் கலந்து கொண்டு மேற்படி யோசனையை நடத்திவைக்க முடியாதென்று பதில் தெரிவித்து விட்டார்.

---

# மதுபானக் கும்மி.

மலாய் நாட்டில் ஈப்போவில் திருவள்ளுவர் கலாசாலையில் தலைமை யாசிரியராய் நல்ல தொண்டு புரிந்து வரும் யாழ்ப்பாணம் நெ. வை. செல்லையா அவர்கள் இயற்றிய "மதுமானிடக் கும்மி" என்ற 103 பாடல்கள் அடங்கிய புத்தகம் வரப்பெற்றோம். கேட்போர் மனதைக் கவரத்தக்க இப்பாடல்களைப் பாடிய ஆசிரியருடைய கவித்திறமையும் புத்தகத்தை அச்சிட்டு மலாய் நாட்டில் தோட்டங்களில் வேலை செய்து வரும் தமிழருக்கு இலவசமாய்க் கொடுக்குமாறு பொருளுதவி புரிந்த கண்டனூர் அ.ராம.அள. இராமநாதன் செட்டியாரவர்களுடைய கொடையும் போற்றத்தக்கவையாகும். கும்மிகளில் அழகும் தெளிவும் உண்மையும் ஏழைகள் பால் மிக்க அன்பும் நிறைந்திருப்பதைக் கீழ்க் கண்ட பாடல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

வயிறு வளர்ப்பதற்காக ஊரை விட்டுக் கடல் தாண்டிச் சென்று கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை மதுபானத்தில் போடும் ஏழைகளைப் பார்த்துச் சொல்லுகிறார் :—

பஞ்சத்தி னாலும் வறுமையி னாலுமே
பாடுபட் டேர்விட்டே யிங்குவந்து
அஞ்சாமற் கள்ளை யருந்திக் கெடுவது
ஆகுமோ நீதியோ மானிடனே.

என்ன நினைப்புடன் ஊர்விட்டு வந்தா
யிருந்த நிலையுன் செயல்களென்ன
பின்னதை மாற்றிப் பிறண்டியைக் கொண்டது
பேதைமை யல்லவோ மானிடனே.

தந்நாடு பிச்சை யெடுக்கப் பிறநாடு
தாங்கிப் பணம்படைத் தோங்கிநிற்கப்
பின்னாலு முன்னாலு மில்லா வழக்கத்தைப்
பேணிக் கெடாதேநீ மானிடனே.

குடிக்கு ஆதரவாகச் சொல்லும் பல பொய்களைப்பற்றிக் கூறுகிறார்:—

நோய்க்கு மருந்துக்குத் தேகவலுப்புக்கு
நோவுக்கு வாய்வுக்கு ஓய்வுக்கெனச்
சாக்குகள் போக்குகள் சொல்லிக் குடிப்பது
தாள்கெடப் பந்தயம் மானிடனே.

மிதமாக மதுபானம் செய்வதில் தவறில்லை என்றும் வரம்பு மீறினால்தான் கேடு வரும் என்றும் எண்ணிச் சிலர் குடிக்க ஆரம்பிப்பதைக் கண்டித்துச் சொல்கிறார் :—

வேடிக்கை யாக முதலி விருந்திடும்
மெல்லமெல்லக் கூடிப் பள்ளத்திலே
தேடி விழுத்தி யெதற்கு முதவாத
தீயவ னாக்கிடும் மானிடனே.

கொஞ்சம் மறைவாய்க் குடித்து முதலிலே
கூட்டாளி சேர்ந்தபி னாட்டமுட
னஞ்சாமற் கள்ளுக் கடைக்கேயுன் ஆயுளை
யர்ப்பணஞ் செய்திடும் மானிடனே.

இந்தப் பழக்கம் மேல் நாட்டு நாகரிகத்துடன் கலந்து வருவதைப் பற்றிச் சொல்கிறார் :—

மேசைக் குடிவகை வெள்ளைச் சிகரட்டு
மேன்மையென் றெண்ணியே புத்திகெட்டுக்
காசைக் கொடுத்துப் பழியோடு தீமையைக்
கைக்கொள்ள லாகுமோ மானிடனே.

தாங்காத சீதள பூமியாம் வெள்ளையர்
தந்நாட்டுக் காகமுன் செய்ததனைத்
தீங்கான தென்றவ ரேவிடும் போதுநீ
தீண்டுதல் நல்லதோ மானிடனே.

ஏழைகளின் பணம் வீண் போவது பற்றிக் கூறுகிறார் :—

கஞ்சி குடிக்க வழியற்ற பேருங்
கடன்பட்டுக் காசை முடிந்துகொண்டு
கொஞ்சமும் வெட்கமில்லாமல் வெறிநீர்
குடிப்பது புத்தியோ மானிடனே.

காசைக்கொடுத்துக் கருத்தழிந்தே கெட்டுக்
கைப்பொரு ளற்றுக் கவலையுடன்
நீசத்த னமான பேரைப் பெறுவது
நீதியோ நீசொல்லு மானிடனே.

பாடுபட்டுக் காலை யந்தி வரைக்கும்
பசியுடன் வேர்வை நிலத்தில் விழக்
கூலிக்கு வேலைசெய் யர்ப்பப் பணத்தைக்
குடித்து வெறிக்காதே மானிடனே.

மதுபானத்தால் பகுத்தறிவு கெடும் என்கிறார் :—

தன்மனை தாய்தங்கை வேற்றுமை யற்றுத்
தடுமாறி யுள்ளுணர் வில்லாதே
இன்னிலை கெட்டு விலங்குகள் போல
விருப்பர் குடிகாரர் மானிடனே.

சாந்த நிலையிலிருக்கு மொருவர்க்குச்
சாராய வர்க்கத்தி லொன்றளித்துக்
கூர்ந்து கவனித்தா லன்னவர் தன்மை
குணதோஷங் காணலாம் மானிடனே.

நீதிக்கு மாறு செயவேணு மென்று
நினைப்பவர் கொஞ்சங் குடிக்கவேணும்
ஏதுசெ யவேணு மாகிலுஞ் செய்விக்கு
மென்ப தறிந்துகொள் மானிடனே.

மதுபானம் செய்பவர்களுடன் நேசம் செய்தால் கேடு விளையும் என்கிறார் :—

துட்ட மிருகமும் பாம்புஞ் சிலபோது
துன்பஞ் செயாமல் விலகிவிடும்
கெட்ட குடிகாரன் நேசமெப் போதுமே
கேட்டை விளைவிக்கும் மானிடனே.

மதுபான வியாபாரத்தில் லாபம் சம்பாதிப்பவர்களைப் பார்த்துச் சொல்கிறார் :—

சாராயம் கள்ளபின் தீய குடிவகைச்
சாப்புடன் குத்தகை கொண்டுபல
ஏராள மாகப் பணம்படைத் தோர்களும்
ஏங்கிக் கெடுவாரே மானிடனே.

தீயவழியில் வரும்பொரு ளெந்நாளுந்
தீமையைச் செய்து சிலநாளில்
மாயமாய் நின்ற பொருளையுங் கொண்டு
வருந்த வொழிந்திடும் மானிடனே.

முடிவில் சொன்னதெல்லாம் வீணாகுமோவென்று ஐயுற்று,

கல்லாத மாந்தருக் கெத்தனை தான்புத்தி
காதிலுரைத்தாலு மேறுது
அல்லாத மாந்தரே கெட்டமதுவை
யருந்திக் கெடுபவர் மானிடனே.

தீமை குடிவகை யென்றுபல் லோருந்
திறம்படப் பேசுவர் சொற்பொழிவும்
நாம மளவினில் நிற்பதல் லாதோர்
நலமுமுண்டோ சொல்லு மானிடனே.

அவ்வகை போலிந்தக் கும்மியைப் பாடி
அடுப்பாங் கரையி லெறிந்துவிட்டுச்
செய்வதை முன்போலச் செய்துகெடாமலே
சீர்பெறச் செல்லையா செப்பினனே.

என்றிவ்வாறு பாடி ஆசிரியர் வெகு அழகாகக் கும்மியை முடிக்கிறார்.

---



வாரத்திற்கு ஒரு ரூபாய் கள்ளுக் கடையில் செலவு செய்தவன்; 10 வருஷத்திற்குப் பிறகு அவனுக்குக் கிடைத்தது ஒரு குவியல் உடைந்த சீசாக்களும் மொந்தைகளும் தான்.

கள்ளு சாராயந் தொடாத குடியானவன் ஆடு மாடுகள், வீடு வாசல், மக்கள் மனைவியுடன் சுகமாயிருப்பான்.

# திருவல்லிக்கேணி கள்ளுக்கடை

மது, அதிகாரிகளின் மதியையும் குழப்பி விடுவதாய்க் காணப்படுகிறது. சென்னை அரசாங்கத்தின் கலால் இலாகா மந்திரி ஒரு கொள்கையை வெளியிடுகிறார். கலால் இலாகா கமிஷனர் அதற்கு விரோதமாய்க் காரியம் செய்கிறார். பிறகு இரண்டுபேரும் சேர்ந்து அக்காரியம் சரியென்று வாதமிடுகிறார்கள் !

சென்னைச் சட்ட சபையில் சமீபத்தில் ஒரு விவாதம் நடந்தது. திருவல்லிக்கேணியில் கருப்பண்ணி அம்மன் கோவில் இரண்டாவது சந்தில் முந்தி ஒரு கள்ளுக்கடை இருந்தது. அதை 1928-ம் வருஷத்தில் மூடினார்கள். மூடிய கடையை மறுபடியும் இந்த வருஷத்தில் திறந்திருக்கிறார்கள். இதைக் கண்டிப்பதற்காகச் சட்ட சபையில் அவசரப் பிரரேபணை ஒன்று கொண்டுவரப்பட்டது. அந்தப் பக்கத்து ஜனங்களெல்லாம் அவ்விடத்தில் கள்ளுக்கடை வேண்டாம் என்கிறார்களென்றும், புதிதாக மதுவிலக்குப் பிரசாரம்செய்ய ஆரம்பித்திருக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு மூடிய கடையைத் திறப்பது விரோதமான காரியமென்றும் சொல்லப்பட்டன. கண்டனத் தீர்மானம் நிறைவேறியது.

ஐரோப்பியர்களும், உத்தியோகஸ்தர்களும், மந்திரிகளும், அரசாங்க நியமனம் பெற்ற அங்கத்தினர் சிலரும் தீர்மானத்துக்கு விரோதமாய் வாக்களித்தார்கள். விவாதத்தின்போது கலால் கமிஷனர் மிஸ்டர் காடரெல் என்பவரும், கலால் மந்திரி ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார்கள்.

கலால் கமிஷனர் கலால் இலாகா நிர்வாகத்தை நடத்துபவர். இவர் பேசியதைக் கவனித்தால் இவருடைய அபிப்பிராயத்துக்கும் கலால் மந்திரியின் மதுவிலக்குப் பேச்சுக்கும் வெகுதூர மென்று தெரியவரும்.

கலால் மந்திரி கள்ளு சாராயக் கடைகளை மூடிவிடுவதற்குத் தடையாயிருப்பது பணம் ஒன்றுதான் என்று சொல்கிறார். குடி தீமைதான் என்பதை ஒப்புக்கொண்டு, நாலு லட்சம் ரூபாய் செலவழித்து மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறேன் என்கிறார்.

ஆனால் கலால் கமிஷனர் மிஸ்டர் காடரெல் மேற்படி விவாதத்தின் போது சொன்னதைக் கேளுங்கள் :—

"இந்தக் கடைக்கு அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களுக்குக் குடி அவசியமானது. மீன் பிடிக்கக் கட்டுமர மேறிச்சென்று கடுமையான வேலை செய்து வந்தபிறகு களைப்பைப் போக்கிக்கொள்ளக் கள்ளாவது வேறு

குடியாவது அவர்களுக்கு வேண்டும். சோடா குடித்து அவர்கள் தாகம் தணியாது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் கட்டுமரத்தில் வேலை செய்திருந்தால், ஒரு புட்டி பீராவது எவ்வளவு அவசியமென்பதைத் தெரிந்துகொண்டிருப்பார்.''

''சென்ற வருஷம் பத்து கடைகளை மூடிய பிறகு கலால் கமிஷனருடைய (அதாவது என்னுடைய) வாழ்க்கை பெரிய தொல்லையாகி விட்டது. கிராமணிகளும் மற்ற குத்தகைக்காரர்களும் மறுபடி அக்கடைகளைத் திறக்கவேண்டுமென்று மனுவின்மேல் மனுவாய்ப் போட்டுப் பிராணனை வாங்கிவிட்டார்கள். ஆகையால் இந்தக் கடை மீண்டும் திறக்கப்படுமென்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது.''

ஆகவே, மூடிய கடையை மீண்டும் திறந்ததற்கு முதலாவது காரணம் கிராமணிகள் (அதாவது குத்தகைக்காரர்கள்) கேட்டுக் கொண்டது! இரண்டாவது காரணம், செம்படவர்களுக்குக் கள்ளு வேண்டுமென்று மிஸ்டர் காடரெல் அபிப்பிராயப்படுவது!

மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் மந்திரி இந்தக் காரணங்களை மறுத்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அவரும் தீர்மானத்தை எதிர்த்தார்!

உழைப்பாளிகளுக்குக் கள்ளு வேண்டுமென்று மிஸ்டர் காடரெல் சொல்லியது முற்றுந்தவறான கொள்கையென்பது எத்தனையோ முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் கள்ளும் சாராயமும் தேகபலத்தைக் குறைத்து விடுகின்றனவென்றும், ஏழைத் தொழிலாளிகளின் வாழ்க்கைக்கு இவையே பெரும்பகையென்றும் யாருக்குத் தான் தெரியாது? இதைப்பற்றி வேறோரிடத்தில் விரிவாக எழுதியிருக்கிறோம்.

ஆயினும் அதிகாரிகள் திரும்பத் திரும்ப இந்தப் பழம் பாடத்தையே படித்து வருகிறார்கள். உண்மையாய்த் தூங்குவோரை எழுப்பலாம்; பொய்த் தூக்கம் தூங்குபவர்களை எழுப்ப முடியுமா?

மிஸ்டர் காடரெல் போன்றவர்கள் ஏழை உழைப்பாளிகளிடம் அபார கருணை கொண்டவர்கள்போல் நடிப்பதுதான் எல்லாவற்றிலும் துயரமான விஷயம். மாதம் ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் வாங்குவோர் பீர் அல்லது சாராயத்துக்காக 50, 60 செலவழித்தால் அது அவர்களுக்குப் பெரிய காரியமாய்த் தோன்றாமலிருக்கலாம். ஆனால் ஏழைத் தொழிலாளிகளோ நாள் முழுதும் வேலை செய்து சம்பாதிக்கும் சொற்ப கூலியில் பெரும் பகுதியைக் குடியில் தொலைக்கிறார்கள். கூலிப் பணம் முழுவதையும் கள்ளுக்கடையில் கொடுத்து விட்டு வீட்டுக்கு வெறுங் கையுடன் திரும்புவோரும் உண்டு. இப்படிப்பட்ட ஏழை உழைப்பாளிகளிடம் வருஷம் ஐந்து கோடி ரூபாய் வசூலித்து அரசாங்கம் நடத்துவோர், அவர்களுடைய நன்மையைப் பற்றிப் பேசுவது விந்தையல்லவா?

மூடிய கடைகளை ஒரு புறம் திறந்து கொண்டே வந்தால், பொதுப் பணத்தைச் செலவழித்து மற்றொரு புறம் நோகாமல் அடிக்கும் மதுவிலக்குப் பிரசாரம் செய்வதில் என்ன பயன்? ஜனங்கள் சிரிக்க மாட்டார்களா?

# கடற்கரைக் கிளிஞ்சல்




ஆதித்திராவிடத்தெருவு

சட்ட சபை

ஆதி திராவிட ஏழைகள் கள்ளினுல் அழிந்து வருகிருர்கள். அவர்களுடைய பிரதி நிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் சட்டசபையில் கள்ளுக் கடைக்கு சாதகமாகப் பேசுகிருர்கள்.

* * * *

## மன்னார்குடி தாலூகா போர்டு

சென்ற செப்டம்பர்மீ 18வ நடந்த மன்னார்குடி தாலூகா போர்டின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது :—

“மதுபானம் பெருகி வருவதால் ஏற்படும் தீமைகளிலிருந்து தேசத்தை விடுதலை செய்வதற்கு மதுபானக் கடைகள் எல்லாவற்றையும் மூடிவிடுதல் அவசியமென்று இந்த சபை அபிப்பிராயப்படுகிறது. இந்தத் தாலூகாவிலுள்ள ஜனங்களில் மிகப் பெரும்பான்மையோர் குடியை உடனே தொலைத்துவிட வேண்டுமென்று ஆவலுடையவர்களாயிருப்பதால், இத்தாலூகாவிலுள்ள மதுபானக் கடைகள் எல்லாவற்றையும் மூடிவிட உத்திரவிடுமாறு இந்த சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது. பூரண மதுவிலக்குச் செய்வதற்கான எல்லாச் சட்டங்களையும் உத்திரவு

களையும் அமுலுக்குக் கொண்டு வருவதற்கும், திருட்டுத்தனமான மது வியாபாரத்தைத் தடுப்பதற்கும் எல்லாவகையிலும் உதவி செய்வதற்கு இந்த போர்டார் தயாரா யிருக்கிறார்கள்."

இத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மேற்படி தாலுகா போர்டின் அக்கிராசனரையும், அதை ஏகமனதாக அங்கீகரித்த அங்கத்தினர்களையும் பாராட்டுகிறோம். மற்ற தாலுகா போர்டுகளும் மன்னார்குடியைப் பின்பற்றி இத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றி வைக்குமென எதிர்பார்க்கிறோம். அப்படி நிறைவேற்றிவிட்டால் இப்பாவத்தின் பழி முழுதும் அரசாங்கத்தாருடைய தாகும்.

*　　*　　*　　*

## கோயில் தென்னை மரம்.

1929ஞு செப்டம்பர் 30வ யிட்டு ஹிந்து தேவஸ்தான பரிபாலன சபையார் சென்னை மாகாணத்திலுள்ள கோயில் கமிட்டிகளின் தலைவர்கள் எல்லாருக்கும் பின்வரும் சுற்றறிக்கையை அனுப்பி யிருக்கிறார்கள் :—

"தேவஸ்தான பரிபாலனச் சட்டத்திற்குட்பட்ட பல கோயில்களின் தென்னை மரங்கள் கள்ளுக் குத்தகைக்கு விடப்படுவதாக போர்டாருக்குத் தெரிய வந்திருக்கிறது. ஜனங்கள் பக்தியுடன் வழிபடும் தெய்வங்களின் பெயரால் இத்தகைய காரியம் செய்யப்படுவது சிறிதும் தகுதியற்றது என போர்டார் கருதுகிறார்கள். கட்குடி ஜனங்களின் நன்மைக்குகந்த தன்று; அதனால் அவர்களுடைய இகபர நலங்களும், அறிவும் சன்மார்க்கமும் கெடுகின்றன. இத்தகைய ஜீவகாருண்ய நோக்கமல்லாமல், தென்னை மரங்களைக் கள்ளுக்குத்தகைக்கு விடுவதால் நாளடைவில் மரங்களுக்கும் கெடுதி உண்டாகுமென்று போர்டார் அறிகிறார்கள். ஆகையால் உடனே கிடைக்கும் பண லாபத்தை மட்டும் கருதித் தென்னந் தோப்புகளை மேற்சொன்ன தகாத காரியத்துக்கு விடக்கூடாதென்று போர்டார் தேவஸ்தானங்களின் தர்மகர்த்தர்கள் எல்லாருக்கும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

இந்த யோசனையை நிறைவேற்றி வைப்பதால் சில கோயில்களுக்கு வருமானம் மிகுதியும் குறைந்து போகுமென்பது போர்டாருக்குத் தெரிந்த விஷயம். அத்தகைய கோயில்களின் தர்மகர்த்தர்கள் பண உதவி கோரிப் பொது ஜனங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; கூடிய வரை செலவுகளைக் குறைப்பதற்கும் முயற்சி செய்யலாம். எப்படியானாலும் தென்னந்தோப்புகளைக் கள்ளுக்கு விடுவது மட்டும் சரியாகாது."

*　　*　　*　　*

உலகில் நாகரிகமடைந்த தேசங்களுக்குள்ளே குடிகார தேசம் பிரான்சு தான். பிரஞ்சுக்காரன் ஒவ்வொருவனும் வேறெந்த நாட்டானையும் விட சராசரியில் அதிகம் குடிக்கிறான். இதன் பயன் என்ன? ஐரோப்பாவிலுள்ள வேறெந்த தேசத்தையும் விட பிரான்ஸ் தேசத்தில் மரண விகிதம் அதிகம். "மான்செஸ்டர் கார்டியன்" என்னும் பத்திரிகையின் பாரிஸ் நிருபர் அப்பத்திரிகையில் எழுதுவதாவது :—"1923-ம் வருஷத்தில் பிரான்ஸில் 1000 ஜனங்களுக்கு 170 பேர் செத்துப்போனார்கள். ஜெர்மனியில் 139 பேரும், இங்கிலாந்தில் 116 பேரும் தான் அதே

வருஷத்தில் இறந்தார்கள். அதற்குப் பிறகு பிரான்ஸில் மரண விகிதம் இன்னும் அதிகமாகி இப்பொழுது 1000 ஜனங்களுக்கு 190 பேர் வீதம் சாகிறார்கள்......சீதோஷ்ண நிலையில் ஐரோப்பா கண்டத்திலேயே பிரான்ஸ் தான் சிறந்த ஆரோக்கியமான பிரதேசம். அப்படியிருந்தும் இங்கிலாந்தில் க்ஷய ரோகத்தினால் சாகிறவர்களைப்போல் இரண்டு மடங்கு பேர் பிரான்ஸில் அந்த நோயினால் சாகிறார்கள்."

* * * *

சுகாதாரத்தில் சிறந்த நாட்டில் மேற்கூறியவாறு க்ஷய ரோகம் அதிகமாயிருப்பதேன்? இதன் காரணம் பாரிஸைச் சேர்ந்த ஒரு பிரபல ஆசிரியர் சொல்கிறார்:—"க்ஷய ரோகம் பரவுவதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று மதுபானமாகும்." சென்ற மகா யுத்தத்தின்போது ஜர்மனியின் சைன்யங்களினால் கணக்கில்லாத பிரஞ்சு வீரர்களும், மற்ற சாதாரண பிரஜைகளும் இறந்து போனார்கள் என்பது பலரும் அறிந்ததே. ஆனால் பிரஞ்சு அரசாங்கத் தலைவர் சமீபத்தில் என்ன கூறினார் தெரியுமா? "ஜெர்மானிய சைன்யங்களினால் கொல்லப்பட்ட பிரஞ்சுக்காரர்களைவிட அதிகம் பேரை மதுபானம் கொன்றிருக்கிறது" என்றார்.

* * * *

லண்டனில் கண்ணில்லாத பிள்ளைகளுக்காகச் சில பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றில் உள்ள பிள்ளைகள் ஏறக்குறைய ஆயிரம் பேரில் பாதிப்பேருக்கு மேல் குடிகாரத் தகப்பன்மாரின் குழந்தைகளாம். டாக்டர் எவான்ஸ் என்பவர் சமீபத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் இந்த விவரம் வெளியிட்டார்.

* * * *

ஒரு பெரிய பாதிரியார் சமீபத்தில் பின்வருமாறு சொன்னார்:— "கடவுள் எனக்கு ஒரு மந்திரத்தைத் தந்தாரானால், நான் அதை உபயோகித்துக் கள்ளு, சாராயக் கடைகள், சாராயங் காய்ச்சும் இடங்கள் முதலியவற்றை ஒரே யடியில் அழித்துத் தரையோடு தரையாக்கி விடுவேன்." அத்தகைய மந்திரம் நமது மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கிறது. அவர்கள் அதை உபயோகப்படுத்துவதுதான் கிடையாது.

* * * *

நியூயார்க் நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் டாக்டர் லாம்பர்ட் என்பவர் ஓர் ஆராய்ச்சி நடத்தினார். நியூமோனியா என்கிற ஒரு கெட்ட சுரத்தினால் பீடிக்கப்பட்ட ஆயிரம் நோயாளிகளுக்கு அவர் சிகிச்சை செய்தார். இவர்களில் குடிகாரர்களுக்குள் 100-க்கு 50 பேர் பிழைக்காமல் இறந்து போனார்கள். குடியாதவர்களுக்குள் 100-க்கு 24 பேர் தான் இறந்தார்கள்.

* * * *

கலால் வருமானம் என்பது என்ன? "கள்ளு, சாராயக் கடைக்காரர்கள் தங்கள் பாதகத் தொழிலை நடத்துவதற்காக அரசாங்கத்துக்குக் கொடுக்கும் பகிரங்க லஞ்சம்" என்று ஒரு பிரமுகர் சொல்கிறார். ஒரு சிறிய காரியத்துக்கு யாராவது ஓர் அரசாங்க உத்தியோகஸ்தனுக்கு லஞ்சம் கொடுத்தால் இருவரும் தண்டிக்கப்படுவார்கள். கொலை, களவு

முதலியவைகளுக்குக் காரணமாகும் கள்ளுத்தொழில் செய்வோரிடம் அரசாங்கத்தாரே பகிரங்க லஞ்சம் பெறுகிறார்கள். இதற்குக் கேள்வி முறை இல்லை.

* * * *

மோட்டார் விபத்துகளைப் பற்றிய செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. மோட்டார் விபத்துகளில் குறைந்த பட்சம் 100-க்கு 90, சொற்பமோ அதிகமோ குடிப்பழக்கமுள்ளவர்கள் வண்டி ஓட்டுவதினாலேயே ஏற்படுகின்றன.

* * * *

ஸர் மாதியூ ஹேல் என்ற கீர்த்திபெற்ற நீதிபதி சொன்னதாவது:— "மொத்தம் இருபது வருஷகாலம் நான் இங்கிலாந்தின் தலைமை நீதிபதியா யிருந்தேன். இந்தக் காலத்தில் நடந்திருக்கும் கொலைகள், திருட்டுகள், வழிப்பறிக் கொள்ளைகள், கலவரங்கள், கலகங்கள், விபசாரம், பலாத்காரக் கற்பழித்தல் முதலிய பாதகக் குற்றங்கள் எல்லாவற்றையும் ஐந்து பங்காய்ப் பிரித்தால் இவற்றில் நாலுபங்கு குடியினால் விளைந்தவையே யாகும்."

* * * *

"குடியை ஒழிப்பதற்காகச் சட்டம் செய்தல் கொலை, களவு குற்றங்களை ஒழிப்பதற்காகச் சட்டம் செய்வதேயாகும்."— இது இங்கிலாந்தில் சிறைச்சாலை முறையைக் குறித்து நீண்ட ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதியிருக்கும் ஸர் இ. ரக்கின்ஸ் என்பவரின் வாக்கு.

* * * *

ஒரு பெரிய பத்திரிகை ஆசிரியர் சொல்லுகிறார்:— "இந்த வருஷ ஆரம்பத்திற்குப் பிறகு எனக்குத் தெரிந்த மனிதர்களில் ஐந்து பேர் குடியினால் அகால மரண மடைந்திருக்கிறார்கள். இவர்களில் மூன்று பேர் பத்திரிகாசிரியர்கள். ஒருவர் மிக நன்றாய் எழுதக்கூடிய நூலாசிரியர். மற்றொருவர் பெயர் பெற்ற வக்கீல். ஆறுமாதத்தில் எனக்குத் தெரிந்தவர்களில் ஐந்து பேர் இறந்தார்களென்றால் மொத்தம் குடியினால் சாகிறவர்கள் எத்தனைபேர்! அரசாங்கப் புள்ளி விவரங்களில் இது தெரிய வருவதில்லை. ஏனென்றால் மரணத்துக்குக் காரணம் குடி என்பதாக யாரும் போடுவதில்லை."

* * * *

சென்னை அரசாங்கத்தாருடைய 1929ஆ ஜூன்மீ 27உ நெ. 1611 உத்தரவு:—"அரசாங்கத்தாருடைய 1927ஆ மேமீ 11உ நெ. 924-ம் உத்திரவில் சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்கள் கள்ளு சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை அளவுக்கு மிஞ்சி உபயோகிப்பதால் தேகத்திற்கு உண்டாகும் தீங்கைப்பற்றி எடுத்துக்காட்டுவதில் சர்க்காருக்கு ஆக்ஷேபணை யில்லையென்று பகிரங்கப்படுத்தியிருந்தது. இப்போது அரசாங்கத்தார் உத்திரவு செய்வது என்னவென்றால், மிதமிஞ்சி உபயோகித்தல் கூடாது என்று சொல்வதோடு மதுபானத்தை முற்றிலும் விட்டுவிடுவது தேக ஆரோக்கியத்திற்கு நலமென்றும் மேற்படி உத்தியோகஸ்தர்கள் போதிக்கவேண்டும்."

# மகாத்மா காந்தி

## என்ன சொல்கிறார்?

லக்ஷக்கணக்கான ஏழை ஜனங்களைப் போல்லாத கட்குடியி னின்று விடுதலை செய்வதைக் காட்டிலும் பொருள் அபிவிருத்தி திட்டம் வேறென்ன இருக்கிறது? மது விலக்கினால் ஏழையிலும் ஏழையான ஜனங்களுக்குப் பணம் சேரும். கலால் வருமானத் தில் ஒரு ரூபாய் குறைந்ததென்றால், ஏழைகளின் பணம் பல ரூபாய் மிச்சமாகி அவர்கள் மனைவி மக்களுக்குப் பயன்பட்ட தாகும். மிகக் கீழான நிலையிலிருப்பவர்கள் முன்னேற்ற மடை வார்கள். மதுவிலக்கு, தீண்டா வகுப்பாருக்குக் கைமேல் பல னளிக்கும் வேலைத்திட்டமாகும். நாம் செய்யக்கூடிய வேறெந் தத் தனிப்பட்ட வேலைத் திட்டத்தினாலும் அவர்கள் இவ்வளவு பொருளுதவி அடையமாட்டார்கள்.

* * * *

சட்ட சபைக்குப்போய் ஏதேனும் நன்மை செய்யலாமென்ற நம்பிக்கையுள்ளவர்கள் மதுவிலக்கை ஒரு முக்கிய பிரச்னையாக் கிக்கொள்ள வேண்டும். அங்கத்தினர் ஒவ்வொருவரும் பூரண மதுவிலக்கை ஆதரிப்பதுமட்டும் போதாது; மதுவிலக்குச் சட்டம் ஏற்படுவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் காரியம் முடிவடையும் வரையில் கிளர்ச்சியைப் பிடிவாதமாய் நடத்தி வைக்கவும் உறுதி மொழி கொடுக்கவேண்டும். பொது ஜனங்களின் அபிப் பிராயத்தைக் கேட்கவேண்டும் என்ற சாக்கின் பேரில் மதுவிலக் குச் சட்டம் செய்வதைத் தள்ளிப் போடக்கூடாது. இந்தியாவில் மதுபானத்தை ஒழிப்பதைப் பற்றி ஜனங்களிடம் வாக்கெடுக்க வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் இந்நாட்டில் குடியும், மற்ற லாகிரிப் பொருள்கள் அருந்தும் வழக்கமும் துன்மார்க்க மென்றே ஜனங்களால் கருதப்படுகிறது. மேல் நாட்டில் போல இந்தியாவில் குடிக்குக் கௌரவம் கிடையாது. இங்கே மது பானத்தை நாகரிகமென்று கருதுவதில்லை. ஆதலின் இந்தியாவில் மதுவை யொழிப்பதற்குமுன் ஜனங்களின் அபிப்பிராயம் கேட்க வேண்டுமென்று சொல்லுதல் வெறும் சாக்குப் போக்கே யாகும்.

Regd. No. M. 2519.

# மது விலக்குப் புத்தகங்கள்

---

## குடிகெடுக்கும் கள்

[பொருளடக்கம் :—குழந்தைகள் பேச்சு, தலைகீழ் நியாயம், பானைக்கும் சீசாவுக்கும் சம்பாஷணை, கள் வந்த கதை, கலால் வருமானம், விடுதலைப் பாட்டு.]

விலை அணு 1.

---

## திக்கற்ற பார்வதி

(இது கட்குடியால் வரும் கேட்டைக் காட்டும் ஒரு கதை)

விலை அணு 2.

கிடைக்குமிடம் :

எல்லாக் காதி வஸ்திராலயங்களும்,

அல்லது

காரியதரிசி, காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரால் வெளியிடப்பட்டது.